விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை (28.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

ரா ம் கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பதிலளிக்க இலங்கைக்கு வாய்ப்பு

## மனித உரிமை உப குழுவின் தலைவி அறிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மனித உரிமைகளுக்கான உப குழுவின் கூட்டத்தில் இலங்கை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் பதிலை எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம் என மேற்படி உப குழுவின் தலைவி கெய்டி ஹொட்டவுலா தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தொழில்நுட்பத்துடன் கடற்படைத்தாக்குதல் படகுகள்

### வெளிநாட்டுச் சந்தையில் கிராக்கி

(கொழும்பு)

கடற்படையின் புதிய படகுகளுக்கு வெளிநாட்டு சந்தைகளில் கிராக்கி ஏற்படுவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளதாக கடற்படையின் தலைமையகத்துக்கு நெருக்கமான தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக் கட்ட போரின்போது விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுக்கு மேலாக இராணுவம் வியந்துபோன இன்னொரு (16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் எச்சரிக்கையை அடுத்து ஆயுதம் வாங்கலை கைவிட்டது இலங்கை

### விக்கிலீக்ஸில் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் போது ஈரானிடமிருந்தும், வடகொரியாவிடம் இருந்தும் ஆயுதங்களை கொள்வனவு செய்ய இலங்கை முயன்ற போதிலும் இவ் ஆயுதக் கொள்வனவு நடைமுறைப்படுத்தப்பட்டால் கடுமையான பொருளாதார தடைகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்ற அமெரிக்காவின் பயமுறுத்தல் காரணமாக இது கைவிடப்பட்டதாக விக்கிலீக்ஸ் ஆவணங்களை மேற்கோள்காட்டி நோர்வே ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் காலங்களில் வட கொரியாவிடமிருந்து ராக்கெட் ஏவுகணைகளையும் வேறு படைக்கல உபகரணங்களையும் கொள்வனவு செய்யும் நோக்குடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ்–பிரதீப் நேற்றுச் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமாருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுடனான உறவுகள் (16ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுர தமிழ் சிறைக் கைதிகள் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு கடிதம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை சந்தித்து பிரச்சினைகளை அறிந்துகொண்டு தமது விடுதலைக்கு உதவுமாறு கோரி கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி அனுப்பி வைத்த அக்கடிதத்தின் விபரம் வருமாறு, சிறைச்சாலைகளில் பலவருடங்களாக பிணையின்றியும் துரித விசாரணைகள் இன்றியும் வாடிக்கொண்டிருக்கும் அரசியல் (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய பாதுகாப்புச் செயலாளர் நேற்று இலங்கையை வந்தடைந்தார்



(கொழும்பு)

இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் உட்பட 7 பேர் கொண்ட தூதுக்குழுவினர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இக்குழுவினர் இலங்கை அதிகாரியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இலங் (16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

சிவல்புரி சிங்காரம் எழுதும் 2011 ஆம் ஆண்டிற்கான சிறப்பு பலன்கள்



## வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுட்டுக்கொலை! உரும்பிராயில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் (வயது 54) நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உரும்பிராய் மேற்கு மூன்று கோயிலடியிலுள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் 10.30 மணியளவில் துப்பாக்கியுடன் புகுந்த நபரே அவரை சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தந்தையும் அவரது 13 வயது மகளும் வீட்டில் இருந்தபோது சமையலறையின் புகைக்கூடு வழியாக உள்நுழைந்த ஆயுததாரி ஒருவன் வீட்டுக்குள் நுழைந்து அங்கு பதுங்கியிருந்துள்ளான். (15ஆம் பக்கம் பார்க்க)




NIBM இன் கணனிக் கற்கைநெறிகள்

கணனி தொழில்நுட்பத்தில் சான்றிதள் கற்கைநெறி (Certification in Computer Science)

அலுவலகர்களுக்கான கணனி கற்கைநெறி (certification on computers for officers)

அனுமதி பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

ஆகக் குறைந்த கல்வி தகைமை க.பொ.த சாதாரண தரம் (G.C.E (O/L))

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

**30.12.2010 முதல் 04.01.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 250/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள்,வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஶ்ரீஸ் இன்(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (C-1983)


# கல்வி அமைச்சுக்கு தவறான தகவல்களை வழங்கும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

சில முன்னணிப் பாடசாலைகளின் அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு தவறான தகவல்களை வழங்கிவிட்டு தேவைக்கதிகமான ஆளணி மற்றும்பௌதிகவளங்களைபெற்றுக் கொள்வதாககல்வி அமைச்சர்பந்துல குணவர்த்தனகுற்றஞ்சுமத்தியுள்ளார்.

இத்தகைய அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்றை தான் நியமிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இந்த அதிபர்கள் அமைச்சை தவறாக வழிநடத்துகின்றனர். யதார்த்த ரீதியாக தேவையில்லாத போதிலும் நேரசூசிகளைக் காண்பித்து கூடுதலான ஆசிரியர்களை கோருகின்றனர். இக் கோரிக்கைகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொறிமுறையொன்று இல்லாதநிலையில்அதைஉண்மையென அமைச்சு கருதுகிறது.

ஆனால் தமது பாடசாலையிலிருந்து ஆசிரியர்கள் இடமாற்றப்படாமல் இருப்பதற்காக மேற்படி அதிபர்கள் வேண்டுமென்றே இதை செய்கிறார்கள் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சில அதிபர்கள் சரியான காரணம் எதுவும் இல்லாமல் வகுப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றனர். ஒரு வகுப்பில் மாணவர்களை உள்ளடக்க முடியுமாக இருந்தபோதிலும் இரு வகுப்புகளாக பிரிக்கின்றனர். இத்தகைய அதிபர்கள் குறித்தும் நாம் விசாரிக்க விரும்புகின்றோம்.

இதற்கானவிசாரணைப்பிரிவிற்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவையை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் சேர்க்கப்படுவர். அவர்களுக்குகுறைந்தபட்சம்10வருடஅனுபவம் இருக்க வேண்டும். இத்தகைய அனுபவம் கொண்ட ஆசிரியர்களும் கருத்திற் கொள்ளப்படுவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரும் தமது பாடசாலைகளிலுள்ள வசதிகள் மற்றும் தேவைகள் குறித்த விபரங்களைடிசெம்பர்30ஆம்திகதிக்குமுன் அனுப்ப வேண்டும் எனவும் கல்வியமைச்சர் கோரியுள்ளார். (ச-5)

# விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் கைதாகின்றனர்

## வன்னித் தகவல்கள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

புனர்வாழ்வளிக்கப்பட்டதாக கூறப்பட்டு விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் பலர் விசாரணைக்கென்று காரணம் கூறப்பட்டாலும் கைது செய்யப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதாக தெரிகிறது.

யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பின்னரும் சரணடைந்த பல போராளிகள் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். பின்னர் இவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் சிலர் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளாத சிலரால் விசாரணைக்கென்றும் சில சமயங்களில் காரணம் எதுவும் கூறப்படாமலும் அழைத்து செல்லப்படுகின்றனர் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் கடந்த காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சில இடங்களில் நடந்துள்ளது.மேலும்கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்னமும் பலர் தமது இருப்பிடத்திற்கருகில் உள்ள படைமுகாம்களில் கையெழுத்திடுகின்றனர் எனவும் கூறப்படுகிறது. (எ-1)

# கத்தியால் குத்தி தாலிக்கொடி அபகரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் கத்தி முனையில் 8 பவுண் தாலிக்கொடி திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று இரவு வேளை வீட்டில் தனித்திருந்த தங்கவேலாயுதம் செல்வராணி (வயது 57) என்பவரின் 8 பவுண் தாலிக்கொடியே களவாடப்பட்டுள்ளது.

வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் பிரஸ்தாப பெண்ணுக்கு கத்தியால் குத்திவிட்டு கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடியை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக பருத்தித்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-7,61)

# முன்னணிப் பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியீடு

(கொழும்பு)

5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கிணங்க தமிழ்மொழி மூலமான முன்னணிப்பாடசாலைகளுக்கு6ஆம்வகுப்புக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப் புள்ளிகள் கல்வியமைச்சால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆண்கள் பாடசாலைகளில் றோயல் கல்லூரியும் பெண்கள் பாடசாலைகளில் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியும் கலவன் பாடசாலைகளில் ஹைலண்ட் மத்திய மகாவித்தியாலயமும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

வெட்டுப்புள்ளி வெளியான பாடசாலைகளின் விபரம் வருமாறு.

கொழும்பு றோயல் கல்லூரி 177, கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி 167, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 149, கொழும்பு இந்துக் கல்லூரி 141, கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி 164, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி 157, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 147, கொக்குவில் இந்துக் கல்லூரி 146 (ச-5)





**DMI** ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L-2011 DAY CLASS**

புவியியல் -N.பாபு

* அலகு ரீதியான மீட்டல்
* மாதாந்த பரீட்சைகள்

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (3304)






# மரண அறிவித்தல்

## அமரர் மாணிக்கம் சிங்கராசா

***(சிவசக்தி மல்ரி சென்ரர் உரிமையாளரின் தந்தை - வட்டுக்கோட்டை வீதி, அரசடிச்சந்தி, நவாலி )***



*நவாலியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிங்கராசா 27.12.2010 நேற்று (திங்கட்கிழமை) சிவபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி, தங்கச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சந்தானலக்சுமியின் அன்புக் கணவரும் விஜயானந்த், புறொக்சானந்த், சர்வானந்த், ரணிசானந்த், நிரோஜனா, சதீஸ்ஆனந்த், டில்குவா ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி, பிருந்தா, சுரேஸ்குமார்(சுரேஸ் பல்பொருள் வாணிப நிலையம், சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனும் மகாலிங்கம், தர்மராசா, ரத்தினராசா (ரஞ்சன்) சந்திரலேகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறின்சிலா, வியான்சி, வினோவின்ஸ், தசானந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.*

*அன்னாரின் ஈமக்கிரியைகள் 28.12.2010 இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

***72/6,பலாலிறோட்,***
***கந்தர்மடம்,***
***யாழ்ப்பாணம்.*** (3305)

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நிர்வாக நுணுக்கங்கள்

ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருத்தர் ஏதோ தவறுசெய்து விட்டார். உடனே மேலதிகாரி அவரைக் கூப்பிட்டார். அவரிடம் "நீங்கள் செய்வது தவறு" என்று கோபமாகக் கூறினார். இவர் ஒரு ரகம்.

சில அதிகாரிகள் எப்படியென்றால் அவர்கள் "நீங்கள் சொல்வது தவறு" என்று சொல்வதில்லை.

"நீங்கள் செய்வது சரியில்லையென்று நான் நினைக்கிறேன்" என்று சொல்வார்கள்.

இரண்டுக்கும் அர்த்தம் ஒன்றுதான். இருந்தாலும் வார்த்தைகள் வித்தியாசம்.

நிர்வாகத்திறமை இல்லாத ஒரு அதிகாரி ' You are wrong" என்று சொல்லுவாராம்.

நிர்வாகத் திறமையுள்ள அதிகாரியாக இருந்தால் அதையே கொஞ்சம் மாற்றி "I think you are not correct" என்பாராம்.

இதுதான் வித்தியாசம். இருந்தாலும் வார்த்தைகளை உபயோகப்படுத்தும் விதத்தை வைத்துத்தான் வேலை நன்றாக நடப்பதும் – நடக்காததும் இருக்கிறது. விபரம் தெரிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் 'Be a leader not a Boss" என்கிறார்கள்.

ஒரு Leader ஆக இரு. Boss ஆக இருக்காதே என்கிறார்கள். சரி,அப்படியானால் leader க்கும் Boss க்கும் வித்தியாசம் இருக்கிறதா? இருக்கிறது.

ஒரு leader எப்படி நடந்து கொள்வார்? ஒரு Boss எப்படி நடந்து கொள்வார்?

இதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதற்கு சில விபரங்கள் இருக்கிறது. அதைச் சொல்கிறேன். கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

Boss என்பவர் விரட்டிக் கொண்டே இருப்பார்.

Leader என்பவர் ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்பார்.

நாளைக்குள் அந்த வேலையைச் செய்து முடிக்கவில்லையானால் தொலைத்து விடுவேன் என்பார் அவர். இதுவரைக்கும் நீங்கள் செய்திருக்கும் வேலை மிகவும் அற்புதம் என்பார் இவர்.

Boss அதிகாரத்தை நம்பி செயற்படுவார்.

Leader நல்லெண்ணத்தை நம்பிச் செயற்படுவார்.

நம்மிடம் அதிகாரம் இருக்கிறது. அதனால் காரியத்தை சாதித்துவிடலாம் என்று நினைப்பவர் அவர். மற்றவர்களிடம் ஒரு நல்ல அபிப்பிராயத்தை சம்பாதித்துக் கொண்டு அது மூலமாக காரியங்களை சாதிப்பவர் இவர்.

Boss பயத்தை உண்டு பண்ணுவார்.

Leader அன்பை பரவச் செய்வார்.

Boss – எதற்கெடுத்தாலும் 'நான்', 'நான்' என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

Leader – 'நாம்', 'நாம்' என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

Boss- தப்புக்குக் காரணம் யார் என்று பார்ப்பார்.

Leader- தப்பு என்ன? என்று பார்ப்பார்.

The boss shows who is wrong. The Leader shows what is wrong.

இந்தக் காரியம் எப்படி செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்பவர் Boss. இந்தக் காரியத்தை எப்படி செய்ய வேண்டுமென்று செய்து காட்டுபவர் Leader.

Boss - பணியாளர்களைத் திட்டுவார்.

Leader-மரியாதைக்குரியவராக நடந்து கொள்வார்.

செய்யும் வேலையை ஒரு சுமையாக நினைப்பவர் Boss.

செய்யும் வேலையை ஒரு சந்தோஷமாக ஆக்குபவர் Leader.

ஒரு முதலாளியாக இருப்பவர்– அல்லது ஒரு நிர்வாகியாக இருப்பவர் இப்படியான நுணுக்கங்களை தெரிந்து வைத்திருப்பது நல்லது.

ஒரு Boss இருந்தார். அவர் ஒருநாள் மிகவும் பெருமையாக தன்னுடைய அலுவலகத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

" எனக்குக் கீழே 200 பேர் வேலை செய்கிறார்கள் சேர். நான் ஒரு கோடு கிழித்தால் அவர்கள் அதைத் தாண்டாத அளவுக்கு நான் நடந்து கொள்கிறேன்" என்றார்.

"அது எப்படி முடிகிறது? உங்களால்?" என்று கேட்டேன்.

"நான் கோடே கிழிப்பதில்லை சேர்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலவச சுயதொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு சமூக கற்கை நிலையத்தில் 2011 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஆண், பெண் இரு பாலாருக்குமான இலவசசுயதொழில் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் தையல் பயிற்சி, அலங்காரப் பொருள் உற்பத்தி, மனை முகாமைத்துவம், மெழுகுவர்த்தி, கடித உறை தயாரித்தல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர்கள், யுவதிகள் இப்பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சுயமாக சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடும் வகையில் இப்பயிற்சி நெறி திட்டமிடப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றது:

இப்பயிற்சி நெறிக்கு தோற்ற விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து பணிப்பாளர், கலாகேத்திரா கல்வி நுண்கலை வளாகம், மின்சார நிலைய வீதி, ஊரெழு மேற்கு, சுன்னாகம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே ஏற்றுக் கொள்ளப்படுவதனால் விண்ணப்பிக்கும் முன்னுரிமை அடைப்படையில் அனுமதிகள் வழங்கப்படும் எனவும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியையும் குறிப்பிடவும்.

மேலதிக தகவல்களுக்கு 077 6184250 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# வடகிழக்கில் சொத்துக்களை இழந்தோருக்கு நட்ட ஈடு

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் யுத்தத் தினால் சொத்துக்களை இழந்த மேலும் 154 பேருக்கு நேற்று முன்தினம் நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது இந்த நட்டஈடு வழங்கப்பட்டது. யுத்தத்தின்போது வீடுகளையும் தமது சொத்துக்களையும் தொழில்வாய்ப்புக்களையும் இழந்த மக்களில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கே இந்த நட்ட ஈடு வழங்கப்பட்டது.

யுத்தத்தினால் தமது சொத்துக்களை இழந்த மேலும் பலர் நட்டஈடு கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இலவச தையல் பயிற்சி வகுப்புகள்

யா/ புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆறுமாத கால இலவச தையல் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் இப்பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

பாடசாலைக் கல்வியை விட்டு விலகியவர்கள் இப்பயிற்சியைப் பெற முடியும். அத்துடன் இப்பயிற்சியைப் பெற விரும்புவோர் ஞாயிறு தவிர்ந்த ஏனைய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் 11.00 மணி வரை பாடசாலையில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் இரா. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120-150 | 150 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 220 | 300 | 180 |
| தக்காளி | 70 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 70 | 80 | 80 |
| கரட் | 40 | 80 | 120 | 90 |
| பூசணி | 25 | 50 | 40 | 40 |
| புடோல் | 60 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 30-40 | 40 | 50 | 50 |
| சின்னவெங்காயம் | 120-200 | 220 | 120 | 200 |
| பெரியவெங்காயம் | 200 | 170 | 200 | 180 |
| பாகற்காய் | 100 | 150 | 200 | 190 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 90 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 190 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 90 | 120 | 150 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 170 | 250 | -- | -- |
| போஞ்சி | 80 | 100 | 140 | 110 |
| கத்தரிதம்புள்ள | 120-150 | 120 | 160 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 50 | 50 | 35 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 90 |
| தேங்காய்(ஒன்று) | 45 | 50 | 50 | 45 |

# காணி மாவட்ட பதிவக பணிகள் இடைநிறுத்தம்

வருட நிறைவுப் பணிகளை முன்னிட்டு எதிர்வரும் 30,31 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண காணி மாவட்டப் பதிவகத்தில் விவாக, பிறப்பு, இறப்பு மற்றும் காணி தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் தொடர்ந்து 03 ஆம் திகதி முதல் வழமை போல் சகல பணிகளும் இடம்பெறும் என யாழ். காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-9)

# இராசி பலன்

*28.12.2010*
*(மார்கழி 13, செவ்வாய்க்கிழமை)*
*அட்டமி முன்னிரவு 11.20 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 8.40 மணிவரை*
*இராகுகாலம் 3.28-4.58 மணிவரை*
*சுபநேரம் 10.58-12.28 மணிவரை*

**மேடம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், முற்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், அதிர்ஷ்டகரமான நாள்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செய்திகள் வந்து சேரும், எதிர்கால வளர்ச்சிக்காக முக்கிய திட்டங்களை தீட்டுவீர்கள், சொத்துக்களில் முறையான இலாபம் கிடைக்கும், பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** புரிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், வாகன பராமரிப்புச் செலவுகள் குறையும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும், மாலையில் விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**சிங்கம்** வியாபார நன்மையுண்டு, பயணங்களால் பலன் உண்டு, எடுத்த கருமங்கள் நிறைவேறும், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வாக்குமேன்மையுண்டு.

**கன்னி** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், உடல் நலனில் கவனம் தேவை, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், தேவையற்ற கற்பனைகள் குடிகொள்ளும்.

**துலாம்** உற்றார் உறவினர்கள் உதவிக் கரம் நீட்ட முன்வருவர், இலட்சிய வெற்றிக்கு அம்பிகையை வழிபடவேண்டிய நாள், தொழில் சம்பந்தமாக அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்** உள்ளம் மகிழும் செய்தியொன்று வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், செய்தொழிலால் வருமானம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** சொல்லைச் செயலாக்கி காட்டும் நாள், உறவினர்கள் உங்களின் மனம் போல் நடந்து கொள்வர், தூரதேசச் செய்தியொன்று நல்ல தகவலைத்தரும், பணத் தேவைகள் நிவர்த்தியாகும்.

**மகரம்** செய்யும் காரியங்களில் உங்கள் திறமை மேம்படும், நண்பர்கள் சந்திப்புண்டு, கட்டுப்பாடான நாள், பிரயாண அனுகூலமுண்டு, சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** ஆரோக்கியக் குறைவான நாள், நண்பர்களிடம் மனக்குறை கேட்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், வரவும், செலவும் சமனாகும்.

**மீனம்** பெரியவர்களிடம் பாராட்டுப் பெறுவீர்கள், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பழைய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.உள்ளூராட்சித் திணைக்கள கேட்போர்கூடத்தில் அடுத்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா, வடமாகாண சபையின் சட்ட நிபுணத்துவ ஆலோசகர் ரி.விக்னராஜா, உள்ளூராட்சி அமைப்பின் செயலாளர் திருமதி வி.ரமேஸ் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேசசபை செயலாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# முதலாம் தர மாணவர்களுக்கான கால்கோள்விழா 18ஆம் திகதி ஆரம்பம்

(அல்வாய்)

அரச பாடசால்லகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற உதவிபெறும் அல்லது பெறாத தனியார் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்தல் எதிர் வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி நடை பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் ஆரம்ப வகுப்பு நடை பெறும் சகல பாடசாலைகளிலும் முதலாம் தரத்திற்கு மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து முறைப்படி வகுப்புக்கள் ஆரம் பிப்பதற்கான கால்கோள் விழாவை ஒழுங்கு செய்யவேண்டும்.

முதன்முதலில் பாடசாலைக்கு வருகை தரும் நாள் பிள்ளையின் ஞாபகத்தில் இருக் கக் கூடியதாக இவ் விழாவை ஒழுங்கு செய் தல் மிக முக்கியமானதாகும்.

உத்தேச நிகழ்ச்சிகள் காலை 9 மணி தொடக்கம் 9.10 வரை நடைபெறவுள்ளது. காலை 9.10 மணி தொடக்கம் 9.30 வரை அதிதிகளை வரவேற்றல், தேசிய கொடி யேற்றல்,தேசிய கீதம் இசைத்தல், பாடசாலைக் கீதம் இசைத்தல் 9.30 மணி தொடக் கம் 9.45 மணிவரை சமய வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நாள் வேலைகளில் முதலாம் தர ஆரம்ப பிள்ளைகளை வரவேற்க தரம் 2 பிள்ளைகளின் இசைநிகழ்ச்சிகள் அடங்க லான காட்சி ஒன்றை ஒழுங்கு செய்தல், ஆரம்பக்கல்வி மறுசீரமைப்பு, முதலாம் தரத் தில் புதிய பாடவிதானத்தை அமுலாக்கும் நோக்கம் ஆகியன பற்றி வருகைதரும் முத லாம் தர பிள்ளைகளின் பெற்றோருக்கு அறிவுறுத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் உள்ளடக் கப்படல்வேண்டும்.

இவ் உத்தியோகபூர்வ விழாவில் சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளுக்கு முன் னுரிமை வழங்கப்படும் வகையில் வேலைத் திட்டம் அமையவேண்டும்.

இவ் வேலைத் திட்டத்திற்காக உரிய பாட சாலைகளில் இருக்கின்ற பிள்ளைகளின் சமயங் களுக்கு ஏற்ப சமயத்தலைவர்களை பங்கேற்கச் செய்வது மிக முக்கியமானதா கும்.

எதிர்வரும் ஜனவரிமாதம் 18 ஆம்திகதி இவ்விழாவை பாடசாலை நடாத்தியதன் பின் அது பற்றிய அறிக்கையை உரிய வலயக் கல்வி பணிப்பாளருக்கு அவ்வப் பகுதி அதிபர்கள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.

இப்பணியை பிள்ளைகளுக்கு கஷ்டம் ஏற்படாத வகையில் சொற்ப நேரத்தில் முடிக் கும்படி மத்திய கல்வி அமைச்சின் செய லாளர் எவ்.எம். குணசேகர அறிவித்துள்ளார்.

வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் உரிய காலத் தில் இச் செயற்திட்டத்தை செயற்படுத்தி புகைப்படப் பிரதி ஒன்றுடன் கால்கோள் விழா அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுள் ளார். (ஸ்ரீ-3-19)

## வீதி அகலிப்பு பணிகள் குறித்து அமைச்சர் ஆய்வு

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை வீதி அகலிப்பு பணி களை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தனது குழு வினரோடு நேரில் சென்று பார்வையிட் டார்.

நேற்று முன்தினம் நீர்வேலி யூதர் மடச் சந்தியில் பருத்தித்துறை வீதி அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந் தார். (ஸ்ரீ-3-51)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மேற்கிலுள்ள பருத்திக்கலட்டி ஞானவைரவர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து விசேட பூசை நடை பெறும். அடியார்கள் அனைவரும் இதில்பங் குபற்றி பயனடையுமாறு தேவஸ் தானத்தி னர் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-3)

யாழ்.செய்திகள்

# வயோதிப மாதுவின் கழுத்தை நெரித்து தங்கச்சங்கிலி அபகரிப்பு

(காரைநகர்)

யாழ்.மானிப்பாய் வீதி சுடுகாட்டு ஆலடிச் சந்திக்கு அண்மையில் தனித்திருந்த வயோதிப மாதுவின் கழுத்தினை நெரித்து தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள் ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வயோதிப மாது தனித்திருந்த சமயம் மோட் டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் வயோதிப மாதுவின் கழுத்தினை நெரித்து அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த அதேயிடத் தைச் சேர்ந்த இவ் வயோதிப மாது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப் பகுதியிலும், ஐயனார் கோவில் வீதி யிலும் கடந்த மூன்று மாதத்திற்கு இவ்வாறான நான்கு சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-246)

# கரையொதுங்கிய டொல்பினை பிடித்து வெட்டிய ஐவர் பொலிஸாரால் கைது



(பருத்தித்துறை)

கற்கோவளம் புனிதநகர்ப் பகுதி யில் உள்ள கடற் கரையில் கரையொ துங்கிய டொல்பின் இன மீனை பிடித்து வெட்டிய ஐவர் பொலி ஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற் றது.

ஜே/406 கிராம சேவகர்பிரிவைச் சேர்ந்த கிராம அலு வலரினால் பொலி ஸாருக்கு கொடுக்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த சூழல் பாதுகாப்பு குழு பொலிஸ் பொறுப்பதிகாரி நிசங்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் பிரபாகரன் ஆகி யோர் டொல்பினை வெட்டிக் கொண்டிருந்த ஐவரைக் கைதுசெய்தனர்.

இச்சம்பவத்தில் ச.இராசலிங்கம் (வயது 54), யோ.தவக்குமார் (வயது 30), இ.சேவியர் (வயது 27), கு.கமலேந்திரன் (வயது 32), தி.இராஜசேந்திரன் (வயது 50) ஆகிய ஐவ ருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மேற்படி டொல்பின் சுமார் 12 அடி நீள மும் 600 கிலோ நிறையுள்ளது என பொலி ஸார் தெரிவித்தனர்.

இதேபோன்ற டொல்பின் மீன்கள் அதிக ளவில் யாழ்.குடா கடற்பரப்பில் கரையொ துங்குவது குறிப்பிடத்தக்கது.

மேற்படி நபர்களை பொலிஸார் விசார ணை செய்து வருவதுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-3-61-10-24)

# குடியிருப்பு பகுதிகளில் புதிதாக முளைக்கும் இராணுவ முகாம்கள்

## மக்கள் மத்தியில் அச்சநிலை

(காரைநகர்)

காரைநகரில் மக்கள் குடியிருப்புப் பகுதி களிற்குள் புதிய புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது.

காரைநகர் ஆலடி பகுதியில் கடந்த வாரம் திடீரென வந்த இராணுவத்தினர் ஆட்கள் குடியிருப்பற்ற வீட்டில் முகாமிட்டுள்ளனர். அத்துடன் மேலும் மக்கள் குடியிருக்காத பெரிய வீடுகளை விசாரித்தும் வருகின்ற தோடு கடந்த 24 ஆம்திகதி காரைநகர் கருங் காலி பகுதியில் உள்ள வீடொன்றிலும் முகாமிட்டுள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்த இவ்வளவு காலத்திற்குள் கடற்படையின் கட்டுப்பாட்டிற் குள் இருந்த இப் பிரதேசத்தில் தற்போது இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

அத்துடன் இராணுவம் ரோந்துப் பணி க ளையும் மேற்கொண்டுள்ளதுடன் மேலும் பல முகாம்களை அமைக்க இடம்விசாரித்து வரு வது மேலும் அச்சமடைய வைத்துள் ளது.

(ஸ்ரீ-3-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமியில் சிக்கிய ரயில் எஞ்சின் மீண்டும் அதேபாதையில் பயணம்

சுனாமியில் சிக்கிய ரயில் எஞ்சின் மீண்டும் அதே பாதையில் நேற்று முன்தினம் பயணமொன்றை மேற்கொண்டது.

சுனாமி ஏற்பட்டு 6 ஆண்டுகள் நிறைவுறுவதைக்குறிக்கும் முகமாக இந்த 50ஆம் இலக்கரயில் எஞ்சின் விசேட ரயிலொன்றை இழுத்துக்கொண்டு நேற்று முன்தினம் பெரலிய ரயில் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

இந்த ரயிலில் மகாசங்கத்தினர் பிரித் ஓதுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பயணத்தின் போது இடை நடுவில் போக்குவரத்து அமைச்சர் குமார வெலகமவும் இணைந்து கொண்டார். (ஸ்ரீ-2)

## நியமனக் கடிதம் வழங்கல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து உள்ளகப் பயிற்சிக்காக பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கல் வைப வம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடை பெறும் என்று பீடாதிபதி எஸ்.கே. யோகநா தன் அறிவித்துள்ளார். எனவே சகல ஆசிரிய மாணவர்களையும் கல்வியியலாளர்களையும் கலந்துகொள்ளு மாறும் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

# பௌத்த கொடிகளுக்குக் கொடுக்கும் கௌரவம் ஏனைய மதக் கொடிகளுக்கும் வழங்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த கொடிக்கு நாட்டில் கொடுக்கப்படும் அதே அந்தஸ்தும் கௌரவமும் ஏனைய மதங்களின் கொடிகளுக்கும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான மதங்களின் கொடிகளான இந்துக்களின் நந்திக்கொடி, இஸ்லாமியரின் பிறைக்கொடி, கத்தோலிக்கர்களின் புனித பாப்பரசருக்கான வெள்ளை- மஞ்சள் கொடி ஆகியவற்றிற்கும் பௌத்த கொடிக்கு கிடைத்திருக்கும் அதே மதிப்பையும் மரியாதையையும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்து சகல மதக்கொடிகளையும் ஜனரஞ்சகப்படுத்துவேன் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.


இன்று பத்து பன்னிரண்டு வயதைக்கொண்ட எங்கள் நாட்டின் பிள்ளைச் செல்வங்கள் எதிர் வரும் 2020 ஆம் ஆண்டில் இந் நாட்டின் ஆட்சியாளர்களை தெரிவு செய்யும் பொறுப்பான பிரஜைகளாகி விடுவார்கள்.

அவர்களுக்கு இப்போது இருந்தே பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் அவர்களின் வாழ்க்கையில் முதலிடம் பெற வேண்டும் என்ற நற்பண்பை கற்றுக்கொடுப்பது என்னுடைய நோக்கம் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்நாட்டிலுள்ள சகல இன மதங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் நாட்டுப்பற்றுடன் துளிர் விட்டு வளரும் இதேவேளையில் அவர்கள் மனதில் மற்ற மதங்களை கௌரவிக்கும் நற்பண்பும் குடிகொள்ளும் .

இதன் மூலம் நாட்டில் உண்மையான இன ஐக்கியத்தையும் மதங்களிடையே பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் வலுப்படுத்தி இலங்கையில் என்றென்றும் சமாதான வெண்புறா ஆகாயத்தில் அச்சுறுத்தல் எதுவுமின்றி கம்பீரமாக பறந்து செல்வதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.

கடந்த 30 ஆண்டு கால பயங்கரவாத யுத்தத்தின் வேதனை வடுக்கள் இந்நாட்டு மக்கள் அனைவரின் மனதிலும் இப்போதுநிலைத்து இருக்கின்றது என்ற உண்மையை நாம் மறக்கத் தயார் இல்லை.



இந்த வேதனை வடுக்கள் இப்போது உள்ள வயது வந்தவர்களின் மனதிலிருந்து முற் றாக அகன்று விடுவதற்கு நிச்சயம் சில காலம் எடுக்கும்.

எனவே நாம் நாட்டின் தேசிய ஐக்கியத்தையும் பல்வேறு மதங்களிடையே உண்மையான புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் எமது சிறுவர்கள் மத்தியில் இப்போது இருந்தே வளர்ப்பது அவசியம் என்றும் அதன் மூலம் இன் னும் 9, 10 வருடங்களில் நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள்.

எங்கள் அனைவருக்கும் சம உரிமையும் சமவாய்ப்பும் சகல துறைகளிலும் இருக்கின்றது என்ற உணர்வு இந்த பிள்ளைகளின் அடி மனதில் நிரந்தரமாக குடிகொண்டு விடும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# போட்டியை காட்டிலும் கலந்துரையாடல் சிறந்தது

## ஐ.தே.க. தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் புதிய நிர்வாக உறுப்பினர்களை போட்டியின் மூலம் தெரிவு செய்வதை காட்டிலும் பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதையே விரும்புவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

நிர்வாக உறுப்பினர் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி ஜயவிக்ரம பெரேரா இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து கட்சியின் மத்திய செயற்குழுவின் புதிய பதவிகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறும் என குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# பொன்சேகா விரைவில் விடுவிக்கப்படுவார்

## ஜயலத் எம்.பி. நம்பிக்கை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விரைவில் விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற அவர் சரத் பொன்சேகாவுடன் கலந்துரையாடினார்.

உலகளாவிய ரீதியில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் தினத்தை கொண்டாடும் நிலையில் தாம் சரத்பொன்சேகாவின் விரைவான விடுதலைக்காக பிரார்த்திப்பதாக ஜயலத் ஜயவாத்தன குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இவர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நிகழ்வு ஒன்றின் போது சந்தித்த வேளையில் சரத்பொன்சேகாவின் விடுதலைக்கான கோரிக்கையை முன் வைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-2)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 22 . 06 . 1982

விண்ணில் 14 . 11 . 2010



### அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் (றீகன்)

(கரித்தாஸ் கியூடெக் பணியாளர்)

14.11.2010 இல் இறைபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்கட்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் கரித்தாஸ் கியூடெக் இயக்குநர், பணியாளர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், தொலைத்தொடர்பு மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து சிறப்பான பிரார்த்தனை செய்த அருட்தந்தையர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆன்ம இளைப்பாற்றி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்)

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். (3301) குடும்பத்தினர்



## அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் வசித்து மரணமெய்திய அம்பலவாணர் பரமநாதன் என்பவரின் மரணச்சாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

மரணமெய்தியவர்

பரமநாதன் கைம்பெண் வத்சலா
35/2, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வழ.இல:தத்துவத். 03/2010 மனுதார்

எதிராக

பராயமற்றவர் 1. பரமநாதன் நர்த்தனன்
" 2.பரமநாதன் மகிதனன்
இருவரும் 35/2, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் பராயமற்ற 1ஆம், 2ஆம் எதிர் மனுதார்களின்
வழக்குப் பாதுகாவலர்
3. கந்தையா கிருஷ்ணதாஸ்
பொற்பதி றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

எதிர்மனுதார்கள்

இவ்வழக்கு மேற்குறித்த மனுதாரினால் மேற்குறித்த மரணமடைந்தவரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் யாராவது ஆட்சேபனை இருப்பின் 2011 ஆம் ஆண்டு தை மாதம் 21ஆம் திகதி இம்மன்றில் காலை 9.00 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவுறுத்தப் படுகின்றது.


2010 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 03 ஆம் திகதி நீதி மன்றக்கட்டளைப்படி வரைந்தது.

மனுதாரின் சட்டத்தரணி (3299) பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









யாழ்.காரைநகர் கோட்டக்கல்வி அலுவலகத் திறப்புவிழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப் படுவதையும்,கோட்டக்கல்வி அலு வலகப் பெயர்ப்பலகையை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி திரைநீக்கம் செய் வதையும் கேட்டக்கல்வி அலுவல கத்தை நாடாவெட்டித் திறந்து வைப் பதையும் அருகில் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நிற்பதையும், வடமாகாண கல்விஅமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# க.பொ.த.உயர்தரப்பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

*யா/ஹாட்லிக் கல்லூரி*

*கணிதப்பிரிவு*

ரி.பிரணவன்-3ஏ,எவ்.றஜீவன்-3ஏ, எஸ்.சிவராம்-3ஏ, எஸ்.ஜெயராம்-3ஏ,ஏ.கரி காலன்-3ஏ, பி.ஜெயசுதன்-2ஏபி, ஜி.அபி ராம்-3ஏ, ரி.ஜோன் ஜெயந்தன்-2ஏபி,கே. சிறிகுமார்-2ஏபி,ரி.தகீசன்-2ஏபி, பி.மிதுன்-ஏ2பி,கே.மயூரன்-ஏ2பி.

*உயிரியல் பிரிவு*

வி. கோகுலன்-3ஏ,எஸ். விதுரன்-2ஏபி, எம்.பார்த்தீபன்- 2ஏபி.

*வணிகப்பிரிவு*

பி.ராஜாராம்-3ஏ,ஆர்.குகேந்திரன் 2 ஏபி, வி.தர்ஷிகன்-3பி.

*கலைப்பிரிவு*

ஆர்.ரவிராஜ்-2ஏபி, என்.பத்மராஜ் -ஏ 2 பி,வி.பிரியந்-ஏபிசி,ஆர்.ரஞ்சித்-ஏபிசி, எஸ். ஜசிந்தன்-ஏபிசி,எஸ்.பிரதீபன்-2பிசி, ஏ வினோதன்-ஏ2சி,ஏ.சூசை அன்ரனி-2பி சி.

*நுண்கலைப்பிரிவு*

வி.பிரதீபன்-ஏபிசி,எஸ். செல்வறஜீவன்-ஏபிசி. (ஸ்ரீ-3-19)

# ஆபாச வீடியோக்களில் தோன்றிய 110 பேர் அடையாளம் காணப்பட்டனர்

ஆபாச வீடியோக்களில் தோன்றியுள்ள இலங்கை இளைஞர், யுவதிகள் 110 பேரின் புகைப்படங்கள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் மகளிர் மற் றும் சிறுவர் பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் 75 ஆபாச வீடியோக்களில் தோன் றியுள்ள இளைஞர்,யுவதிகளின் புகைப் படங்கள் நாட்டில் பல பகுதி பொலிஸ் நிலை யங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அந்தப் பிரிவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதன்படி அடுத்த வாரம் பொலிஸ் நிலை யங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு தெரி வித்துள்ளது.

காலி, மாத்தறை,அம்பாறை, இரத்தினபுரி, அனுராதபுரம்,நீர்கொழும்பு,புத்தளம் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு இந்தப் புகைப் படங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இவ்வாறான ஆபாசப் படங்களில் தங் களுக்குத் தெரியாமலே இளைஞர், யுவதிகள் யாரும் இருப்பார்களாயின் உடனடியாக அரு கிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ் மகளிர் மற் றும் சிறுவர் பிரிவு தொடர்ந்தும் வேண்டு கோள் விடுத்து வருகிறது. (ஸ்ரீ-2)

# தனியார் பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலம் பெப்ரவரியில் சமர்ப்பிப்பு

தனியார் பல்கலைக் கழகங்களை அமை ப்பது தொடர்பான சட்டமூலம் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக் கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவ ரட்ண இது தொடர்பாக கருத்துத் தெரிவிக் கையில்,

இதற்கான சட்டமூலங்களை அமைப் பதற்கு சட்ட திணைக்களம் விரைவான நட வடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்க அனுமதி கிடைக்கப்பெறும்.

பல்கலைக்கழக மாணவர்களில் 20 சதவீத மானோர் அமைக்கப்படவுள்ள தனியார் பல் கலைக்கழங்களில் இணைத்துக்கொள்ளப் படுவார்கள் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டி ருப்பதாகவும் உயர் கல்வி அமைச்சு குறிப்பிட் டுள்ளது. (ஸ்ரீ-2)

# கட்டாரில் இவ்வருடம் 13 இலங்கையர்கள் மரணம்

(கொழும்பு)

இவ்வருடம் கட்டார் நாட்டில் 13 இலங்கை யர்கள் மரணமானதாக வெளிநாட்டு அலு வல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து பணியாளர்களாகச் சென்ற இவர்களின் குடும்பங்களுக்கு ரூபா 624 இலட்சம் நட்ட ஈடாக வழங்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-2)

# பலவந்தமான காணாமல் போதல்கள் குறித்த சர்வதேச பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும்

## ஐ.நா.இலங்கையிடம் கோரிக்கை

(கொழும்பு)

பலவந்தமாக காணாமல் போதல் சம் பவங்கள் தொடர்பான சர்வதேச பிரகடனத் தில் கைச்சாத்திடுமாறு இலங்கையிடம் ஐக் கிய நாடுகள் அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது.பலவந்தமான காணாமல் போதல் சம்பவங்களிலிருந்து அனைவரையும் பாது காக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக் கப் படுவதாக சுட்டிக்காட்டுப்பட்டுள்ளது.

அத்தோடு இலங்கையில் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் 100 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் அரசாங்கத்திற்கு தகவல் வழங் கப்பட்டுள்ளதாகவும் பலவந்தமான காணா மல் போதல் சம்பவங்கள் தொடர்பான ஐக் கிய நாடுகளின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டில் இலங்கையில் சட்ட விரோ தமான காணாமல் போதல் சம்பவங்கள் இடம் பெற்றனவா என்பது குறித்து தகவல் வெளி யிட முடியாது எனவும் அடுத்த மாதமளவில் அறிக்கை வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலவந்த காணாமல் போதல் சம்பவங் களை கட்டுப்படுத்தும் சர்வதேச பிரகடனத்தில் 21 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதாகவும் நேற்று முன்தினம் முதல் இந்த பிரகடனம் அமுல் படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கைதுகள், தடுத்து வைத்தல், கடத்தல்கள் மற் றும் அதிகார தரப்பினால் மேற்கொள் ளப் படும் உரிமை மீறல்களிலிருந்து பாது காப்பு அளிக்கும் நோக்கில் இந்த பிரகடனம் அமுல் படுத்தப்படவுள்ளது. இந்த பிரகடனத்திற்கு இலங்கை முதலில் ஆதரவளித்த போதிலும் சில பிணக்குகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை என சுட் டிக்காட்டினார்.

காணாமல் போனவர்களை கண்டுபிடித் தல், குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் காணா மல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்க ளையும் பாதுகாக்க வேண்டி யது அரசாங்கத் தின் கடமையாகும் எனவும் இந்த பிரகடனத் தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச ரீதியில் நியாயம் கிட்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)


# மின்சாரம் தாக்கியதில் முப்பது பேர் காயம்


நொச்சியாகம பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் மின்சார தொழில் நுட்பவியலாளர் ஒருவரை மின்சாரம் தாக்கி யதையடுத்து 30 ஊழியர்கள் காயமடைந் துள்ளனர். மின்சாரம் தாக்கிய இடத்திலிருந்து ஊழியர்கள் வெளியேற முயன்ற போதே மேற்படி ஊழியர்கள் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள துடன் மின் தொழில்நுட்பவியலாளர் பின் னர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்





கவிப்பேரரசு வைரமுத்து

5

இங்கு செல்லத்தாயி புராணம் சிறிது சொல்வோம். நடுத்தர உயரம்- மாநிறம் உள்ளவள். தலைக்கும் முகத்துக்கும் ஒரே நேரத்தில் தேங்காய் எண்ணெயோ விளக்கெண்ணெயோ தேய்ப்பாள், சகிக்கமுடியாத அவலட்சணமில்லை-வியக்கமுடிந்த அழகுமில்லை.

முப்பதுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வயதிருக்கும் அவளுக்கு. பிறந்த தேதி குறித்து வைக்கும் மேட்டுக்குடித் தனமெல்லாம் தெரியாது அவர்களுக்கு. தக்காளிக்கூடை, மஞ்சல் ஓரணாவுக்கு விற்ற ஓர் அடைமழை மாதத்தில் அவள் பிறந்த தாய் ஞாபகம் பேயத்தேவருக்கு.

அந்த ஊரில் பெண்பிள்ளையைப் பள்ளிக்கூடம் சேர்த்தவர் என்ற பெருமை பேயத்தேவருக்கு உண்டு.

ஆனால் பள்ளிக்கூடம் முடித்தவள் என்ற பெருமை அவளுக் கில்லை. முக்கி முக்கிக் கடந்த மூன்றாம் வகுப்பில் கூட அவளால் படம் பார்த்து உரு வஞ்சொல்ல முடிந்ததே தவிர எழுத்துக் கூட்டிப் பெயர் சொல்ல முடியவில்லை. ரெட்டை ஜடையில் ஒற்றை ஜடை பிடித்து உயரத் தூக்கிய வாத்தியாரின் கையைக் கடித்துக் குதறிவிட்டு ஓடிவந்தவள் தான். அன்று முதல் மாட்டுமணிச் சத்தம்கூட, பள்ளிக்கூடத்து மணிச்சத்தமாய் ஈயங்காச்சி ஊற்றியது இருகாதில்.

என்னவோ தெரியவில்லை-சின்னவயதிலிருந்தே அவள் சிரித்ததில்லை. வறட்டு ஓட்டில் வறுபட்ட கல்லுப்பயறு மாதிரியே கடுகடுவென்றிருப்பாள். அவள் ஆளான புதிதில் 'அவுக ஆத்தா' உளுந்தங் க்ளியும் நல்லெண்ணெயும் சேர்த்து உதிரிக் கருப்பட்டித்தூள் விரவிக்கொடுக்க, கருப்பட்டி 'பத்தாது' என்று களித்தட்டைத் தூக்கிக் கதவிலடித்த கோபக்காரி.

மாடுமாதிரி வேலையும் செய்வாள். 'ஒத்த' ஆளாய் பத்துப்படி சோளம் திரிப்பாள். கோழி கூப்பிட எழுந்து வாசல் தெளித்துக் கோலம் போட்டு, கொட்டம் பெருக்கி, சாணியள்ளி, பண்டபாத்திரம் தேய்த்து 'சலக் சலக்' என்று தயிர் கடைந்து, காலைக் கஞ்சிக்கு மறுமாத்தம் அரைத்து வேலைக்குப் போகும் ஆட்களுக்குக் கும்பா நிறையக் கூழ் ஊற்றி வைத்து, ஆடுமாடு ஓட் டிப்போகும் பண்ணைக்காரர்களுக்கு முளைக்கப் போட்ட கம்போ பயறோ முடிந்து கொடுத்து எல் லாரையும் அவரவர் திசைக்குத் ஏவிவிட்டு அவள் முதல்வாய்கூழ் குடிக்கிறபோது கஞ்சிப்பொழுது கடந்தே போய் விடும்.

ஓடியாடி வேலை செய்தாலும் ஒரு போதும் அவள் களைத்துப்போனதில்லை. உருட்டுக் கட்டை உடம்பு அவளுக்கு; ஓங்கு சாங்கான பிறவி.

ரோஷக்காரி அவள். தன் மீதோ தன் குடும்பத்தின் மீதோ ஒருசுடுசொல் விழுந்தாலும் பத்திரகாளியாகி விடுவாள்; பஞ்சு பறத்திவிடுவாள். ஒரு நாள் அப்படித்தான் செங்கானூத்துக் கரட்டில் விறகெடுத்தாள். பச்சைக் கிலுவையும் ஒடசாலி மரமும் கருவேலங்கட்டையும் கட்டி முடித்ததில் பேய்க் கனம் கனத்தது. அவளாகச் சுமையேற்ற முடியவில்லை. 'மம்பட்டி வேலை'க்குப் போய்விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒருவனை அழைத்து "ஏ செவனான்டி தூக்கிவிடறது" என்று எதார்த்தமாகக் கேட்டாள்.

அவள் சொன்ன அதேவார்த்தையை சிறிது தேய்த்துச் சிலேடை செய்து தன் எச்சிலை வார்த்தையில் ஒழுகவிட்டு "தூக்கிவிடத்தானே...? வரரேன்..." என்றான் சிவனாண்டி.

அந்த தொனியின் நக்கல் பொறுக்காத செல்லத்தாயி விறகுக்கட்டிலிருந்து ஒரு கருவேலங்கட்டை உருவினாள் "எடுபட்ட நாயே!" என்று விரட்டி விரட்டி அடித்தாள். கரட்டுக்காட்டு ஆடுமாடுகள் தறிகெட்டோட அடித்தாள். முகமும் முதுகும் கிழிந்து கவுண்டர்காட்டுச் சோளத் தட்டைக்குள் ஓடிஒளிந்தான் சிவனாண்டி.

ஈரமும் உண்டு அவளுக்கு, அவளை நெருப்பென்று தள்ளவும் முடியாது. இனிப்பென்று கொள்ளவும் முடியாது. பொதுக் கிணற்றில் குடி தண்ணீர் இறைக்கக் குடங்கொண்டு போனாள் செல்லத்தாயி. கிணற்றுக்குள் கதறிப்பறந்தது காகமொன்று. கிணற்றின் உள்வட்டப்பொந்தில் அது கட்டிய கூட்டிலிருந்து தவறிவிழுந்த குஞ்சு தண்ணீரில் கிடந்தது.

பதறிப்போனாள் செல்லத்தாயி. "யாத்தே!" என்று நெஞ்சில் ஒருகணம் கைவைத்து நின்றாள். மிதக்கும் குஞ்சருகே வாளி வீசினாள். என்னதான் முயன்றும் சின்னக்குஞ்சு வாளியில் சேரவில்லை. அவள் கொஞ்சங்கூட அஞ்சவில்லையே.

உருளையில் கயிற்றை உருவாஞ்சுருக்கிட்டுச் சரசரவென்று கிணற்றிலிறங்கினாள். குஞ்சைக் கூடு சேர்த்து-காகத்திடம் 'கொத்தும் பெத்து' சொட்டச் சொட்டக் கரையேறினாள்.

கோபத்தையும் கண்ணீரையும் முந்தானையின் எந்தப்பக்கம்தான் முடிந்திருப்பாளோ? அவள் கூப்பிட்ட குரலுக்கு நான் முந்தி நீ முந்தி என்று ஓடி வரும் இரண்டும்.

தன் உணர்ச்சிகளைக் கோபமாய், கண்ணீராய் வடிந்தோட விட்டாலும் தன்னை முட்டாளாக்க முனைபவர்களை மட்டும் அவள் மன்னிக்க மாட்டாள். விளக்குவைத்தபிறகு வீட்டுக்கு வெளியே தரக் கூடாத பொருள்கள் என்று ஒரு பட்டியல் உண்டு கிராமத்தில். எது கொடுத்தாலும் கொடுக் கலாமாம். ஆனால் உப்பும் சுண்ணாம்பும் ஆகவே ஆகாதாம்.

ஒருநாள் அப்படித்தான். வீடு பெருக்கி, விளக்கேற்றி, பஞ்சாரத்தில் கோழியடைத்துக் கொண்டிருந்தபோது ஓடோடிவந்தாள் பூதிவாடன் பொண்ணு.

"செல்லத்தாயி! செல்லத்தாயி! கிழவிக்குப் பூரான் கடிச்சிருக்சு; வெடுக்வெடுக்கன்னு வெசம் ஏறுது. கடிவாயில வைக்கணுமாம்; சுண்ணாம்பு குடு... சுண்ணாம்பு"

திடுக்கிட்டாள் செல்லத்தாயி. கொடுக்கக் கூடாது சாஸ்திரப்படி. ஆனால் சாஸ்திரம் தள்ளிவைத்து தர்மம் காத்தாள். ஓடிச்சென்று சுண்ணாம்புச் சட்டியில் சுட்டுவிரல் விட்டழுத்திக் கொள்ளைச் சுண்ணாம்பு கொடுத்தனுப்பினாள்.

சற்று நேரத்தில் கட்டாந்தரையில் வெண்கலச் சட்டி உருண்டதுபோல் சிரிப்பொலிகேட்டது பக்கத்து வீட்டில்.

"வெத்தலைக்குச் சுண்ணாம்பு கேட்டியில்ல... செல்லத்தாயை ஏச்சுப்புட்டேன் ஏச்சு..." என்று கிழவியோடு வெற்றி கொண்டாடிக் கொண்டிருந்தாள் பூதிவாடன் பொண்ணு. பொறுப்பாளா செல்லத்தாயி? உடம்பின் உஷ்ணமெல்லாம் நெற்றிப்பொட்டில் ஏறிக் கபாலம் பிளக்க- பூதிவாடன் பொண்ணை உரலில் போட்டு- உலக்கையால் இடித்து திரிகையில் இட்டுத் திரிக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு. உக்கிரமானாள். சுண்ணாம்புச் சட்டியிலிருந்த சுண்ணாம்பையெல்லாம் ஒருகையில் வழித்தெடுத்து ஓடினாள். பூதிவாடன் பெண்ணைக் குடுமி பிடித்துத் தரையில் சாய்த்துப் பச்சை மண்ணென்றும் பாராமல் உள்ளங்கைச் சுண்ணாம்பையெல்லாம் கண்காது மூக்கெல்லாம் இழுகி விட்டாள் இழுகி. "செல்லத்தாயி இளுச்சவாச்சி இல்லடி" என்று அவள் கத்திய கத்தல் மட்டும் முத்தாலம்மன் கோயில்வரைக்கும் கேட்டதாய்ச் சொன்னார்கள் காதுள்ளவர்கள்.

அந்தப் பட்டிக்காட்டில் தட்டாஞ்சிட்டுமாதிரி சுதந்திரமாய்த் திரிந்தவள் தன் வாழ்வில் எதிர் பாராத இடிகளையயெல்லாம் சந்தித்துவிட்டாள். ஆடத்தெரியாத ஒருத்தியின் கையில் அடிக்கடி தவறி விழும் சொட்டாங்கல்லாயத் தப்பும் தவறுமாய் அவளை ஆடிவிட்டது காலம்.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் என ஐக்கிய தேசியக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் சாந்த சிசிர குமார உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 25ஆம்திகதி இரவு சேதவத்த பகுதியில் இடம்பெற்றது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மூவர் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர்.

இதேவேளை அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் மீது தாக்குதல் நடத்தியதாக சாந்த சிசிர குமார மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# தொடர் மழை காரணமாக கிழக்கில் 55ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)



கிழக்கு மாகாணத்தில் கடந்த ஓரிரு நாட்களாக தொடர்ந்தும் பெய்துவரும் மழைகாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 55 ஆயிரம் குடும் பங்களைச் சேர்ந்த 2இலட்சத்து 12 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இக்குடும்பங்களில் செங்கலடி, வாகரை மற்றும் கிரான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 715 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 950 பேர் இதுவரை தமது இருப்பிடங்களை விட்டுவெளியேறி பொதுஇடங்களில் தங்கியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் இக்குடும்பங்களின் எண்ணிக்கை அதிகம் என பிரதேச தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

இடம்பெயர்ந்து 11 இடங்களில் தங்கியுள்ள இக் குடும்பங்களுக்கு பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் தற்போது சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாகக் கூறும் மாவட்ட அனர்த்தமுகாமைத்துவநிலையத்தின் பதில் இணைப்பாளர் ஏ.எம்.எம்.கசீர், தன்னார்வத்தொண்டர் அமைப்புகளும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

செங்கலடி மற்றும் கிரான் பிரதேசங்களில் ஒருசில கிராமங்களுக்கிடையிலான தரை வழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் அக்கிராமங்களுக்கிடையில் தற்போது படகுகள் மூலம் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேவை ஏற்படும் பட்சத்தில் மேலதிக படகுகளை வாடகைக்கு பெறுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அரசாங்க அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் இடம்பெயரும் குடும்பங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# கொம்பனித்தெரு குடியிருப்பாளருக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது

## பாதுகாப்பு செயலாளர் உறுதி



கொழும்பு கொம்பனித் தெரு வாழ் குடியிருப்பாளர்களுக்கு எந்தவிதமான அநீதியும் இழைக்கப்படமாட்டாது. அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கு என்றே அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. இப்பகுதி வாழ் மக்கள் எவ்வித அச்சமும் கொள்ள வேண்டியதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வுகள் பிரதி அமைச்சர் எம்.பயிஸார் முஸ்தபா பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற பேரவை உறுப்பினருமான அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அல்ஹாஜ் அஹ்கம் உவைஸ் ஆகியோர் பாதுகாப்புச் செயலாளரை அவருடைய செயலகத்தில் நேரடியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொம்பனித்தெரு பகுதியில் மதுபான விற்பனை நிலையம் உட்பட ஒரு சிறிய பகுதி மட்டும் கொழும்பு எதிர்கால மாதிரித் திட்டத்தை உருவாக்குவதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். அங்கு வாழ்வோரின் சம்மதத்தை பெற்ற பின்னர்தான் இத்திட்டத்தை அமுல் செய்வோம். தனியார் துறையினர் முதலீட்டாளர்களின் உதவியுடனேயே இந்த அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறோம். இதனை ஊக்குவிக்கும் ஊக்குவிப்பாளர்களாக மட்டுமே அரசாங்கம் செயற்படும்.

இக்குறிப்பிட்ட பகுதியில் முஸ்லிம்களும் தமிழர்களும் சிங்களவர்களும் வாழ்கின்றனர். அரசாங்க ஊழியர்கள் வதியும் மிகவும் பழைமை வாய்ந்த மாடிவீட்டுத் திட்டமும் இங்கு அமைந்துள்ளது. இது குறித்த விடயங்களை நாம் அவர்களுக்கு தெளிவுபடுத்தியபோது அங்கு வாழ் மக்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று அவர் விளக்கமளித்தார். இந்த மாதிரித்திட்டம் வெற்றியளித்தால் ஏனைய இடங்களிலும் மக்கள் வாழ்வதற்கு உரிய நவீன வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சேரிவாழ்மக்களுக்கும் சேரிவாழ்க்கை முறையை ஒழித்து அவர்களுக்குத் தகுந்த இருப்பிடங்கள் அமைத்துக்கொடுக்கப்படும்.

இந்த மாதிரியான அபிவிருத்தித் திட்டங்களை யாராவது எப்போதாவது அமைத்துத் தான் ஆக வேண்டும். கொழும்பை எழில் மிக்க நகரமாக உருவாக்குவதற்கு நாம் பாரிய திட்டம் தீட்டியுள்ளோம். இப்படியான திட்டங் களை சென்னையில் ஆரம்பித்தபோது அதற்கும் விடயம் புரியாமல் பலகோணங் களில் பலர் எதிர்த்தனர். ஆனால் இன்று அந்த மக்களின் தமிழ் நாடு அரசு செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது என்று பாராட்டுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இவ்வாண்டின் இறுதி அமைச்சரவை கூட்டம் நாளை அலரிமாளிகையில்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் இவ்வாண்டிற்கான இறுதி அமைச்சரவைக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் நாளை புதன்கிழமை இரவு நடைபெறும்.

இது இவ்வாண்டுக்கான இறுதி அமைச்சரவைக்கூட்டம் என்பதனால் அமைச்சரவை அந்தஸ்துள்ள சகல அமைச்சர்களையும் இக்கூட்டத்தில் பிரசன்னமாகி இருக்குமாறு அமைச்சரவையின் செயலாளர் பணித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு - செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டத்தன் பின்னர் அமைச்சர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன், தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிலர் அங்கு சென்றிருந்தனர்.

இதனால், கடந்த 22ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவில்லை.

இந்நிலையில், நாளை நடைபெறவிருக்கின்ற இறுதி அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள சகல அமைச்சர்களும் கட்டாயமாக பிரசன்னமாகி இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டம் அலரிமாளிகையில் மட்டுமன்றி எம்பிலிப்பிட்டி, அனுராதபுரம் போன்ற இடங்களிலும் நடத்தப்பட்டது.

அத்துடன், விடுதலைப்புலிகளின் அரசியல் தலைநகரம் என்றழைக்கப்பட்ட கிளிநொச்சியிலும் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

# இலங்கைப் பணிப்பெண் குவைத்தில் மரணம்

(கொழும்பு)

குவைத்தில் பணியாற்றி வந்த இலங்கை யுவதி ஒருவர் மரணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து வீட்டுப் பணிப் பெண்ணாக சென்ற ஒருவரே இவ்வாறு மரணித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவரது உடலில் விசம் கலந்திருக்கின்றமை தெரிய வந்துள்ளதாக குவைத் இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக குடிநீரைப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

சட்டவிரோதமாக குடிநீரைப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள சட்டவிதிமுறைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக காத்திருப்பதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கொழும்புக்கு அண்மையிலுள்ள பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் நீர் பயன்படுத்தப்படுவதனால், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு வருடாந்தம் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட சிலர் அனுமதியில்லாமல் பிரதான வழங்கலிலிருந்து நேரடியாக நீரைப் பெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இந் நடவடிக்கை சில காலங்களுக்கு முன்னர் சில அழுத்தங்களுடனே இடம்பெற்றுள்ளது. சிலர் கடந்த 12 வருடங்களாக நீர் கட்டணங்களைச் செலுத்தாமல் உள்ளனர். புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சட்ட விதிமுறைகளின் ஊடாக இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# குடும்ப ஆட்சி முறைக்கு விரைவில் முடிவு கட்டப்படும்

## ஜயலத் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடும்ப ஆட்சி முறைமை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டையும் மக்களையும் இந்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடமிருந்து மீட்டெடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் நடவடிக்கை எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களை ஏமாற்றி போலி வாக்குறுதிகள் அளித்து தேர்தலில் வெற்றியீட்டிய போதிலும், வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது அரசாங்கம் திணறி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் நெருக்கடி நிலைமைகளில் சிக்கிக் கொள்ளும்போது எதிர்க்கட்சி மீது புலி முத்திரை குத்தி பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முனைப்புக்காட்டப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் மேற் கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் போன்றே ஊழல் மோசடிகளும் அதிகரித்துச் செல்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன், அரசாங்கம் பெருமளவு கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனாவுடனான உறவுகளை தேவையற்ற வகையில் அதிகரித்த அயல்நாடான இந்தியாவுடன் பிணக்கினை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாக குறிப்பிட்டதோடு நாட்டையும் நாட்டு மக்களையும் சர்வதேச ரீதியில் நெருக்கடியான நிலைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவை நோக்கி வரும் வெளிநாட்டுப் பறவைகள்

## வேட்டையாட வேண்டாமென எச்சரிக்கை

ஐரோப்பா மற்றும் சைபீரியா போன்ற நாடுகளில் இக்காலப்பகுதியில் அசாதாரண்மான குளிர் நிலவுவதால் அந்நாடுகளிலுள்ள பறவைகள் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வரும் பறவைகள் இறைச்சித் தேவைக்காக வேட்டையாடப் படுவதாகவும் கூறப்படுகின்றது. இருப்பினும் குறித்த பறவைகளினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் இருப்பதால் அவற்றை வேட்டையாட வேண்டாம் என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இருப்பினும் குறித்த பறவைகளினால் பொதுமக்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத நிலையில் அவற்றின் வருகையைத் தடுக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது எனவும் அவற்றை சுட்டுக்கொல்வதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும் இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 20 பாடசாலைகள் நேற்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம் நிகழ்வு இடம்பெறும் காலப்பகுதியில் விடுமுறை வழங்குவதற்கு ஏதுவாக மொனராகலை மாவட்டத்தில் உள்ள 20 பாடசாலைகளின் 2011 ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டுக்கான தேசத்திற்கு மகுடம் நிகழ்வு மொனராகலை புத்தல பிரதேசத்தில் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை,க.பொ.த. (சா/த) பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் நிலையங்களாக செயற்படும் பாடசலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் 2011ஆம் ஆண்டின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் 3ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

க.பொ.த (சா/த) பரீட்சை மதிப்பீட்டுப்பணிகள் இம் மாதம் 31ஆம் திகதி முதல் ஜனவரி 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ச-5)

# வெளிநாட்டுக் கடற்படையினருக்கு இலங்கைக் கடற்படை பயிற்சி

(கொழும்பு)

உலகில் மிகப்பெரிய போராட்ட அமைப்பான விடுதலைப்புலிகள் அமைப்பை வெற்றி கண்டதனால் ,உலக நாடுகள் பலவற்றின் கடற்படைகளுக்கு பயிற்சி அளிக்குமாறு இலங்கை கடற்படையினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக கடற்படைத்தளபதி திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு அமெரிக்கா,அவுஸ்திரேலியா ,இந்தியா,பாகிஸ்தான் என 12 நாடுகளின் கடற்படையினருக்கு இலங்கைக் கடற்படையின் மூலம் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் குறித்த பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுவரை காலமும் ஒரு சில நாடுகளிடம் மட்டுப்பட்டிருந்த இலங்கைக் கடற்படையின் பயிற்சிகள் ஒரே தடவையில் பல நாடுகளுக்கு வழங்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இது தான் என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக் கடற்படையி னரின் தீர்க்கமான பங்களிப்பின் காரணமாகவே இவ்வாறான வேண்டுகோள் முன் வைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவிக்கின்றார். (ஸ்ரீ-2)

# முன்னாள் போராளிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

முன்னாள் விடுதலைப்புலி போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் அவர்களை முல்லைத்தீவு வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் டிப்ளோமா பட்டம் பெற்ற 100 முன்னாள் போராளிகள் கிறிஸ்மஸ் தினத்தன்று சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் போராளிகளில் ஒரு தொகுதியினர் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில் சாரதிகளாக இணைக்கப்பட்டு யாழ்.கோண்டாவில் பஸ் நிலையத்தோடு இணைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 11ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி போராளிகள் சரணடைந்தனர். இவர்களில் 4 ஆயிரத்து 649 பேருக்கே தற்போது புனர்வாழ்வளிக்கப்படுகின்றது. ஏனைய அனைவரும் அவர்களின் குடும்பத்தோடு இணைக்கப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய போராளிகள் 703 பேரை மேலதிக விசாரணைக்காக ஓமந்தை முகாமிற்கு அனுப்பவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் போராளிகளை புனர்வாழ்வின் ஊடாக மறுவாழ்விற்கு கொண்டு வருவதற்கு முயற்சிப்பதுடன் வாழ்க்கைத் திறன் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடும் நடப்பும்

## சிந்தி

சிந்தி சிந்தப் போவதை ச்சிந்தி
வடக்கது கிழக்கது ஒன்றிணைவது
கல் நாரை க்கண்டது போலது
கற் பனைகொண்டு இணைவது கண்டு
களிப்புற்றார் நினைவுகளில்
முற்றியது இனவாதம் பற்றியது பிரதேச வாதம்
பிரிப்பது பற்றி பீற்றிடும் முதல் மகன்
அவலை நினைத்து உரலை இடிப்பது கறையன்றோ
உரலை நினைத்து அவலை இடிப்பது முறையன்றோ
மன்னன் சுறாவது பிடிக்க இறாலது போட்டது
அவரின் வுணர்வன்றோ
கையது புண்ணைக் கண்டுகொள்ள/கண்ணாடி தேவை
யொன்றோ
கண்டுணரும் நெருப்பை தொட்டுணர
சிந்திப்போம் சிந்தப் போவதைச் சிந்திப்போம்.

**அறியாதவன்**

# 2010.12 28 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1065 - லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலாயம் திறந்து வைக்கப்பட்டது.

★1612 - கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.

★1836 - தெற்கு அவுஸ்திரேலியா, அடிலெய்ட் ஆகியன அமைக்கப்பட்டன.

★1836 - மெக்சிகோவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.

★1846 - அயோவா ஐக்கிய அமெரிக்காவின் 29ஆவது மாநிலமாக இணைந்தது.

★1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவுக்கு உரிமை கோரியது.

★1879 - ஸ்கொட்லாந்தில் டண்டீ என்ற இடத்தில் தொடரூந்து மேம்பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் அதில் சென்று கொண்டிருந்த தொடரூந்து விபத்துக்குள்ளாகியதில் 75 பேர் கொல்லப்பட்டனர்.

★1885 - இந்தியாவின் வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள், ஊடகவியலாளர்கள் 72 பேர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பிப்பதற்கு மும்பையில் கூடினர்.

★1891 - யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.

★1895 - பிரான்சின் லூமியேர சகோதரர்கள் பாரிஸ் நகரில் தங்கள் திரைப் படங்களை முதன்முதலாகப் பொது மக்கள் பார்வைக்குக் கட்டணத்துடன் திரையிட்டனர்.

★1908 - இத்தாலி,சிசிலியில் நில நடுக்கம் ஏற்பட்டதில் 75ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1929 -நியூசிலாந்தின் காலனித்துவ பொலிஸார் ஆயுதமின்றிப் போராட்டத்தில் ஈடுபட்ட சமோவாவின் 11 பேரைச் சுட்டுக்கொன்றனர். இது சமோவாவின் விடுதலை இயக்கத்துக்கு தூண்டுதலாக அமைந்தது.

★1930 - மகாத்மாகாந்தி பேச்சுவார்த்தைகளுக்காக பிரித்தானியா சென்றார்.

★1958 - கியூபாவின் சாண்டா கிளாரா நகர் மீது சேகுவேரா போர் தொடுத் தார்.

★1981 - அமெரிக்காவின் முதலாவது சோதனைக்குழாய் குழந்தை எலிசபெத் கார் வேர்ஜீனியாவில் பிறந்தது.

★1989 - அவுஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் நியூகாசில் நகரில் இடம் பெற்ற 5.6 ரிக்டர் நிலநடுக்கம் காரணமாக 13 பேர் கொல்லப்பட்டனர்.

★2005 - இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம் ஜான்ஜுக் என்பவர் உக்ரேனுக்கு நாடு கடத்த ஐக்கிய அமெரிக்காவின் நீதிமன்றம் உத்தரவிட்டது.

★2006 - எதியோப்பிய மற்றும் சோமாலிய அரசுத் துருப்புக்களும் சோமாலியா தலைநகர் மொகடிசுவைக் கைப் பற்றியதை அடுத்து இஸ்லாமிய போராட்ட அமைப்பின் போராளிகள் தலைநகரைக் கைவிட்டு வெளியேறினர்.

## பிறப்புகள்

★1932 - திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (இ.2002)

★1937 - ரத்தன் டாடா, இந்திய டாட்டா குழுமங்களின் தலைவர்

★1940 - அ.கு.ஆன்டனி, இந்திய அரசியல்வாதி

★1944 - கேரி முலிஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்

★1945 - பிரேந்திரா, நேபாள மன்னர் (இ.2001)

★1947 - நாஞ்சில் நாடன், எழுத்தாளர்

★1954 - டென்செல் வோஷிங்டன், அமெரிக்க நடிகர்

## இறப்பு

★1994 - கோபாலசாமி மகேந்திரராஜா, விடுதலைப் புலிகளின் முன்னாள் உப தலைவர்

**2007-நேபாளத்தில் மன்னராட்சி முடிவுக்கு வந்தது.இடைக்கால பாராளுமன்றம் நாட்டை குடியரசாக அறிவித்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 புத்தாண்டு பலன்கள்




(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் பாதங்கள்)

*சவால் விடுவதையும் அதை சமாளிப்பதையும் கைவந்த கலையாகக் கொண்டிருக்கும் ரிஷப இராசி நேயர்களே!*

வந்துவிட்டது புத்தாண்டு! இனி வளமான வாழ்க்கை உங்களுக்கு அமையுமா? வருங்காலத்திற்காக எடுத்த முயற்சிகள் கைகூடுமா? என்பதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால், புத்தாண்டின் கிரக நிலைகளை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பொதுவாக உங்கள் இராசிநாதன் சுக்ரன் அள்ளிக் கொடுக்கும் வல்லமை பெற்றவர். அந்த வெள்ளிச் சுக்ரன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். அப்புறமென்ன, உங்கள் வீட்டில் பண மழையும், பரிசு மழையும் தான் பெய்யப்போகிறது.

புத்தாண்டு தொடங்கும் முன்னதாகவே, வருகிற ஆண்டு எப்படி எல்லாம் நமக்கு வளர்ச்சியைத் தரப்போகிறது? அரை குறையாக நின்ற பணிகள் அனைத்தும் பூர்த்தியாகுமா? குறைகூறி விலகிச்சென்ற சொந்தங்கள் கூடி வந்து சேருமா? என்றெல்லாம் சிந்திப்பது மனித இயல்புதான். அனுசத்தில் பிறக்கும் இந்த ஆண்டு கணிசமான தொகை உங்கள் கைகளில் புரளலாம்.

நமக்கு வழிகாட்டுவது நவக்கிரகங்களும், அது நாடிச் செல்லும் கட்டங்களும் தான் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. புத்தாண்டில் உள்ள கிரக நிலைகளின் கட்டத்தையும், உங்கள் பொன்னான ஜாதகத்தின் கட்டங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவை இணைந்து செயல்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், கனிவோடு கடவுள் வழிபாட்டை மேற்கொண்டு, யோக பலம்பெற்ற நாளில் தலங்களுக்கும் சென்று வந்தால், எண்ணங்கள் அனைத்தும் எளிதில் நிறைவேறும்.

உங்கள் இராசிநாதன் சுக்ரன் என்பதால் அதற்குரிய எண் ஆறு ஆகும். உங்கள் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் ஆராய்ந்து, அதற்குரிய நவாம்சத்தில் இருக்கும் கிரகநிலை அறிந்து, அந்த கிரக எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயர்களையும் அமைத்துக் கொண்டால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு அமையும்.

புத்தாண்டு 2011இல் மாபெரும் கிரகங்கள் பலவும், மாற்றம் பெறுகின்றன. குறிப்பாக, உங்களுக்கு யோகம் செய்யும் சனியும் பெயர்ச்சியாகிறார். அஷ்டமலாபாதிபதி குருவும் பெயர்ச்சியாகிறார். இராகு-கேதுக்களும் பெயர்ச்சியாகிறார்கள். மே 8ஆம் திகதி மேடத்தில் குருவும், மே 16ஆம் திகதி விருச்சிகத்தில் இராகுவும், ரிஷபத்தில் கேதுவும், டிசம்பர் 21ஆம் திகதி துலாமில் சனியும் சஞ்சரிக்கப் போகிறார்கள். பாம்பு கிரகங்களின் ஆதிக்கம் உங்கள் இராசியில் அதிகம் சேர்வதால், நல்ல மாற்றங்களை நீங்கள் விரைவில் சந் திக்கப் போகிறீர்கள். ஆரோக்கியத்தில் மட்டும் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை இந்த ஆண் டில் உருவாகலாம். ஒவ்வாமை நோய்க்கு ஆளாகாமல் இருக்க நோய் எதிர்ப்பு சக்தியை நீங்கள் உங்கள் உடலில் வளர்த்துக் கொள்ள வேண்டும். பழங்கள், பச்சைக் காய்கறிகள் மற்றும் சத்தான உணவுகளைச் சாப்பிட்டு, சராசரி உடல்வாகைப் பெற்றுக்கொள்ளுங்கள். சந்தோஷத்தை நாளும் சந்திக்கலாம்.

# உங்களுக்கு எப்படி?

இறைவனைச் சுமக்கும் வாகனமான நந்தி உங்கள் இராசியின் சின்னமாக அமைவதால், மற்றவர்களது மனப்பாரங்களை நீங்கள் சுமப்பவர்களாக விளங்குவீர்கள். சந்திரன் உச்சம் பெறும் இராசி உங்கள் இராசி என்பதால், மதிபலம் மிக்கவர்களாகவும் இருப்பீர்கள். எனவே, உங்கள் யோசனைகளைக் கேட்டு நடந்தவர்கள் வெற்றி மீது வெற்றி பெறுகிறார்கள். மற்றவர்கள் வெற்றி பெறுவதைப் போல, நாமும் அல்லவா வெற்றி பெற வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். அந்த உங்கள் எண்ணத்தை உடனடியாக நிறைவேற்றப்போவது இந்தப் புத்தாண்டு 2011இல் தான்.

உங்களுக்கு அடிப்படை தேவைகளான, உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கு ஒருபொழுதும் குறைவு ஏற்படாது. ஆனால், உள்ளத்தில் மட்டும் சலனம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். உதவி செய்யும் குணம் உங்களுக்கு அதிகம் உண்டு. வாழ்வின் மையப்பகுதியில் வரலாறு படைக்கும் நீங்கள் ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டே இருப்பீர்கள். தனுசு இராசிக்காரர்களிடம் மட்டும் நீங்கள் பழகும் போது கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. உங்களுக்கு இந்த 2011-புத்தாண்டு எப்படி அமையப்போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

**01.01.2011 முதல் 07.05.2011 வரை**

இக்காலத்தில் வரவு திருப்தி தரும். வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே கிடைக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குருவின் பார்வை சகோதர ஸ்தானத்தில் பதிவதால், ஒத்துவராத சகோதரர்கள் இனி ஒத்து வருவர். உங்கள் குணமறிந்து நடந்து கொண்டு, செய்யும் முயற்சிக்கு பண உதவியும் செய்வர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பஞ்சாயத்துக்களில் எதிரிகள் உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்வர்.

புத்திர ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், பிள்ளைகளால் பெருமை சேரும். பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரர்களாக விளங்குவதோடு, போட்டி, ।ந்தயங்களிலும் வெற்றி பெற்று பெற்றோர்களுக்கு பெருமை தேடிக் கொடுப்பர். பிள்ளையில்லாத தம்பதியர்களுக்கு இக்காலத்தில் செய்யும் பரிகாரங்கள் மூலம் உடனடியாக பலன் கிடைத்து, புத்திர பேறு உண்டாவதற்கான அறிகுறிகள் தோன்றும். வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும் இந்த நேரத்தில் உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் வந்து சேரும். குருவின் பார்வை பலத்தால் மண வாழ்க்கையும் மகிழ்ச்சி தரும். மாற்று கருத்துடையோரும் மனம் மாறுவர்.

**08.05.2011 முதல் 31.12.2011 வரை**

இக்காலத்தில் குரு, இராகு-கேது மற்றும் சனி ஆகிய கிரகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக பெயர்ச்சியாகிக் கொண்டே வருகின்றன. குருப்பெயர்ச்சியின் விளைவாக, 4, 6, 8 ஆகிய இடங்கள் பலம் பெறுவதால், வீடு வாங்கும் யோகம் விரைவில் கிட்டும். கட்டிய வீட்டை பழுது பார்க்க கணிசமான தொகையைச் செலவிடுவீர்கள். தாய்வழி ஆதரவு பெருகும். கொடுக்கல்- வாங்கல்களில் வளர்ச்சி கூடும். வருமானம் போதுமானதாக இருக்கும்.

களத்திர வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். கனிவோடு கணவன்-மனைவியருக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். இதுவரை நோய் நொடியில் அவதிப்பட்டவர்கள் இனி ஆரோக்கியம் சீராகி, ஆனந்தப்படுவர். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகளில் உழன்றவர்கள் இனி மாற்று வைத்தியத்தால் பம்பரமாக பணி புரிய தொடங்குவர். சென்ற வருடத்தில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் வந்து சேரும்.

மே 16ஆம் திகதி விருச்சிக இராசியில் இராகுவும், ரிஷபத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போவதால், ஒன்றரை ஆண்டுகள் ஒப்பற்ற மாற்றங்களை உங்களுக்கு வழங்கப்போகிறது. பணப் புழக்கம் அதிகரித்தாலும், மன நிம்மதி குறையலாம். ஜென்மகேது திடீர் திடீரென நட்பை பகையாக்கும். பகையை நட்பாக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கொஞ்சம் யோசித்துச் சொல்வது நல்லது. சப்தம இராகு பயணங்களை அதிகரிக்கச் செய்யும். தொழிலதிபர்களாக இருந்தால், காலையில் கல்கத்தா, மாலையில் மலேசியா, இரவில் இத்தாலி என்று சுற்றிக் கொண்டே இருக்கும் சூழ்நிலை அமையும். மற்றவர்களுக்கு அருகில் இருக்கும் ஊர்களுக்கு அதிக பயணம் ஏற்படும். குடும்பத்தினர்களை அனுசரித்துச் சென்றால் மனக்கசப்பில் இருந்து மாறுதல் அடையலாம்.

சிந்திக்காது செய்த காரியங்களில் கூட சிறப்படைய வைக்கும் ஆற்றல் நந்திக்கு உண்டு. எனவே, பிரதோஷ வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். நந்தீஸ்வரர் சந்நிதியில், சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி! என்ற பதிகத்தைப் பாடுங்கள். அதிக பலன் கிடைக்கும்.

டிசம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப் போவதால், உத்தியோகம், தொழிலில் உயர்வு கிடைக்கும். உன்னத வாழ்க்கைக்கும் அடித்தளம் அமைத்துக் கொடுக்கும். ஒன்பது, பத்துக்கு அதிபதியான சனி உச்சம் பெறும் இந்த நேரத்தில் பொன், பொருட்கள் வந்து சேரும். புகழ் கூடும். பண்புள்ள நண்பர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருந்து பணிக்கு ஒத்துழைப்புச் செய்வர். கடன்சுமை குறைந்து கவலை தீரும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் எதிர்பார்த்த படியே அமையும். சனீஸ்வர வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

**சிவல்புரிசிங்காரம்**

(தொடரும்)



ஏஏஏ வென்சர்ஸ் பிறைவெற் லிமிட்டெட் நிறுவனத்தால் அண்மையில் வற்றாப்பளை பாடசாலைக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டது. இதில் பாடசாலைக்கான மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படுவதையும் முல்லைத்தீவு அரச அதிபரால் தெரிவு செய்யப்பட்ட அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு நிறுவனத்தலைவர் க.செவ்வேள் 20 துவிச்சக்கர வண்டிகளை கையளிப்பதையும் அருகில் நிறுவன இயக்குநர்களில் ஒருவரான சுபாசினி வீரசிங்கே,மிரோஜன் ஆகியோர் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இந்திய மாணவர் சுட்டுக்கொலை

ஆந்திரமாநிலம் விஜயவாடாவை சேர்ந்த ஜெயச்சந்திரா என்ற மாணவன் மருத்துவ பட்ட மேற்படிப்பு (எம். எஸ்) படிக்க அமெரிக்காவின் கலிபோர்னியாவுக்குச் சென்றிருந்தார்.

படித்து கொண்டே இவர் இங்கு 24 மணி நேரமும் திறந்து இருக்கும் பல்பொருள் அங்காடியில் பகுதி நேரமாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். கிறிஸ்மஸ் தினமான நேற்று முன்தினம் அவர் அங்கு பணியில் இருந்தார்.

அப்போது அங்கு முகம் மூடி அணிந்தபடி 2 கொள்ளையர் வந்தனர். அவர்கள் அங்கு பணியில் இருந்த ஜெயச்சந்திராவை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். அதில் 5 குண்டுகள் பாய்ந்ததில் அவர் அதே இடத்தில் சுருண்டு விழுந்து பரிதாபமாக இறந்தார்.

அதைத் தொடர்ந்து கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டதாகவும் இச்சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

மேலும் அங்கு வைக்கப்பட்டுள்ள வீடியோ கமராவில் பதிவான காட்சிகளைப் பார்த்து கொலையாளிகளை வலைவீசி தேடி வருகின்றனர்.

இதற்கிடையே சுட்டுக் கொல்லப்பட்ட ஜெயச்சந்திராவின் உடலை இந்தியாவுக்கு அனுப்பும் முயற்சியில் வடஅமெரிக்க தெலுங்கர்கள் சங்க பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# விக்கிலீக்ஸ் நிறுவுநரின் வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளியீடு




ஜீலியன் அசேஞ் தனது விக்கிலீக் இணை யத்தளத்தில் 2 1/2 இலட்சத்துக்கும் அதிகமான இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார். இதில் அதிக படியான இரகசியங்கள் அமெரிக்கா சம்பந் தப்பட்டவை.

இதனால் அமெரிக்க அரசாங்கம் அவர் மீது கடும் கோபத்தில் உள்ளது. அவர் மீது சுவீடன் நாட்டை சேர்ந்த 2 பெண்கள் பாலியல் புகார் அளித்ததை தொடர்ந்து கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அவரது வாழ்க்கை வரலாற்றை வெளியிட இங்கிலாந்து நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் அசேஞ் கையெழுத்திட்டுள்ளார்.

இதன் மூலம் அமெரிக்க பதிப்பாளர், இங்கிலாந்து பதிப்பாளர் உட்பட உலகின் பல பகுதிகளில் இருந்தும் அவருக்கு சுமார் 7 1/2 கோடி வரை கிடைக்கும்.

இப்புத்தகத்தை எழுத நான் விரும்ப வில்லை. ஆனால் நான் எழுதியே தீர வேண் டிய கட்டாயத்துக்கு உள்ளேன். என் வழக்கு தொடர்பாக ஏற்கனவே நான் 1 1/2 கோடி ரூபாய் வரை செலவழித்து விட்டேன். மேலும் என் வழக்கு செலவுக்கும் விக்கிலீக்ஸ் இணையத்தளம் மூழ்காமல் காப்பாற்றவும் பணம் தேவைப்படுகின்றது. ஆகவே இந்த புத்தகத்தை எழுத ஒப்புக்கொண்டேன் என்று அசேஞ் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா , ஹவாய் தீவில் உள்ள அமெரிக்க இராணுவப் படைத் தளத்தில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்களுடன் கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடினார். அங்கு இராணுவ வீரர் ஒருவரின் மனைவிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதையும் அவரது மனைவி மிச்சேல் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவதையும் படத்தில் காணலாம்.

# வடகொரியாவிற்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## தென்கொரிய ஜனாதிபதி தெரிவிப்பு

வடகொரியாவுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென தென்கொரிய ஜனாதிபதி லீ மயுங் பக் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிலிருந்து ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்திற்கு அஞ்சினால் யுத்தத்தை தடுக்க முடியாது எனத் தெரிவித்த அவர் தாக்குதல்களின் மூலம் சிறந்த பாடங்களைக்கற்றுக் கொண்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் சிறந்த இராணுவ உத்திகள் பின்பற்றப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடகொரிய இராணுவத்தினர் தென்கொரியா மீது நடத்திய தாக்குதல்களில் நான்கு பேர் கொல்லப்பட்டிருந்ததுடன், இதனை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்ற நிலை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## தற்கொலை தாக்குதல் எதிரொலி

# பாகிஸ்தானில் ஐ.நா.வின் உணவு வழங்கும் மையங்கள் மூடப்பட்டன

(பெஷாவர்)

தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த வடமேற்கு பாகிஸ்தானில் ஐ.நா. சபையின் உணவு வழங்கும் மையங்கள் உள்ளன.

இங்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து உணவுப் பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

இந்த நிலையில் பஜாவோர் மாகாணத்தில் ஹர் என்ற இடத்தில் உள்ள உணவு வழங்கும் மையத்தில் கடந்த 25 ஆம் திகதி பர்தா அணிந்த தற்கொலை படை பெண் தீவிரவாதி புகுந்து உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க செய்தாள்.

இதில் உணவு பொருட்கள் வாங்க கூடியிருந்த 42 பேர் உடல் சிதறி பலியாகியதுடன் 70 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதைத் தொடர்ந்து வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள உணவு வழங்கும் மையங்களை ஐ.நா. சபை மூடியது. ஏனெனில் அங்கு தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் துயரம் அடைந்துள்ளனர்.

ஆனால் இந்த நடவடிக்கை தற்காலிகமானது தான் நிரந்தரம் அல்ல என்று ஹர் மாகாண நிர்வாகி சோகைல்கான் தெரிவித்துள்ளார். இதற்கிடையே தற்கொலை தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். ஆனால் தாக்குதலில் ஈடுபட்ட பர்தா அணிந்த பெண் தீவிரவாதி யார் என இன்னும் கண்டு பிடிக்கவில்லை.

இத்தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சிகாகோவில் ஒபாமாவின் பிரசாரம் ஆரம்பம்?

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தனது பிரசாரத்தை சிகாகோ நகரில் ஆரம்பிப்பார் என தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஒபாமா உறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லை. எனினும் சிகாகோவில் இருக்கும் அரசியல் நோக்கர்கள் ஒபாமா தனது பிரசாரத்தை சிகாகோ நகரில் ஆரம் பிப்பார் என தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ், கிளிண்டன், ரொனால்ட் ரீகன் ஆகியோர் தங்களது பிரசாரத்தை வெள்ளை மாளிகை அருகிலும் விர்ஜினியாவிலும் ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




# அணு உலைக் கழிவு சேமிப்பு கிடங்குக்கு தென்கொரிய மக்கள் கடும் எதிர்ப்பு

(சியோல்)

தென்கொரியாவில் முதன் முறையாக அணு உலைக் கழிவுகள் சேமிப்பு கிடங்கு செயற்பட ஆரம்பித்துள்ளது.

ஆனால் அந்தக் கிடங்கு செயற்பட உள்ளூர் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.


தென்கொரியாவில் தற்போது மின்சார உற்பத்திக்காக 20 அணு உலைகள் செயற்பட்டு வருகின்றன. நாட்டின் மொத்த மின் தேவையில் 40 சதவீதத்தை இந்த அணு உலைகள் நிறைவு செய்கின்றன.

தென்கொரிய தலைநகர் சியோலில் இருந்து தென்கிழக்கில் 371 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கியோங் ஜு என்ற இடத்தில் அணு உலைக் கழிவுக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

உல்ஜின் என்ற இடத்தில் செயற்பட்டு வரும் அணு உலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் இங்கு சேமிக்கப்படும். உல்ஜின் மட்டுமல்லாமல் கோரி வோல்சாங் மற்றும் இயான்வாங் ஆகிய அணு உலைகளில் இருந்து வரும் அணுக் கழிவுகளும் இங்கு சேமிக்கப்படும். உல்ஜினில் இருந்து அணு உலைக் கழிவுகள் கியோங்ஜுவுக்குள் கொண்டு வரப்படுவதை எதிர்த்து சமீபத்தில் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்குள்ள கிடங்கு முழு வசதி பெறுவதற்கு முன்பே கழிவுகளைக் கொண்டு வருவதன் மூலம் அப்பகுதிக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என்றும் அவர்கள் கூறினர். (ஸ்ரீ-2)

# வெனிசுலாவின் முன்னாள் ஜனாதிபதி கர்லோஸ் ஆண்ட்ரஸ் பெரஸ் மரணம்



தென்னமெரிக்க நாடான வெனிசுலாவின் முன்னாள் ஜனாதிபதி கர்லோஸ் ஆண்ட்ரஸ் பெரஸ் (வயது 88) கிறிஸ்மஸ் தினத்தன்று காலமானார். தென்னமெரிக்கா நாடான வெனிசுலா நாட்டின் ஜனாதிபதியாக 1974-79, 1989 - 93 ஆம் ஆண்டுகளில் பதவி வகித்துள்ளார்.


கடந்த 1922 இல் பிறந்த இவர் தனது 15 ஆவது வயதில் அரசியல் வாழ்வைத் தொடங்கினார். தன் முதல் ஆட்சிக் காலத்தில் நாட்டின் வளத்திற்கு ஆதாரமான எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கினார். அதுவரை அந்த நிறுவனங்கள் அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டன. அவரின் நடவடிக்கையால் வெனிசுலா பொரு ளாதாரத்தில் முன்னேறத் தொடங்கியது. இரண்டாவது ஆட்சிக் காலத்தில் நிலவிய ஊழல் காரணமாக 1993 இல் பெரஸ் பதவி விலக அந்நாட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பின் இரண்டாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட அவர், 1996 இல் விடுவிக்கப்பட்டார். வெனிசுலா நாட்டின் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த பெரஸின் மகள் மரியா பிரான்சியா பெரஸ், கிறிஸ்மஸ் தினத்தன்று வழக்கம் போல் பெரஸ் எழுந்தார். அன்றாட கடமைகளை முடித்தார். நண்பகலில் திடீரென இறந்து விட்டார் என்று கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்குன்குனியா

# Chikungunya




சிக்குன்குனியா காய்ச்சல், சிக்குன் குனியா என்ற வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. இந்தக் காய்ச்சல், ஒருவருடைய மூட்டுக்களைத் தாக்கி முடங்கச் செய்கிறது.

ஏடிஸ் எஜிப்டி (AEDES AEGYPTI) என்ற நுளம்பால், ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு இந்தக் கிருமிகள் மிக அதிக அளவில் பரவுகின்றன. குயிலெக்ஸ் அல்லது மன்சோனியா என்ற நுளம்பாலும் இந்தக் கிருமிகள் பரவுகின்றன.

சிக்குன்குனியா காய்ச்சல், ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு நேரடியாகப் பரவும் தொற்றுநோய் கிடையாது. நுளம்புகளால் மட்டுமே மனிதர்களிடையே பரவுகிறது.

இந்தக் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல்போல் இருக்கும். சிக்குன்குனியா நோய் நிறையப் பேரின் மூட்டுக்களைத் தாக்கி முடக்குமே தவிர இறப்பை ஏற்படுத்தாது. அதனால் உயிர்ப் பயம் வேண்டாம்.

**பரவும் இடங்கள்**

சப் -சகாரன் எனப்படும் ஆபிரிக்கா, இலங்கை மற்றும் சில ஆசிய நாடுகளில் ஏற்படக்கூடிய நோய்.

இந்த நோய் 2006 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு ஏற்பட்டு நிறைய மக்களைப் பாதித்தது.

**பரவும் முறை**


பாதிக்கப்பட்ட ஒருவரிடம் இருந்து இந்த நோய் மற்றவருக்குப் பரவுவதில்லை. நுளம்பு மூலம் மட்டுமே பரவுகிறது.

இந்தக் காய்ச்சல் பெரும்பாலும் மழைக்காலங்களில் தான் பரவும். மனிதர்களின் வசிப்பிடங்களில் தேங்கும் தண்ணீரில் நுளம்புகள் இனப் பெருக்கம் செய்து பெருகுகின்றன.

சிக்குன்குனியாவால் ஏற்படும் காய்ச்சல் மூன்று நாட்களிலேயே குணமாகிவிடும். ஆனால், மூட்டு வலி மற்றும் வீக்கம் மட்டும் பலநாட்களுக்கு, நோயாளியின் வயதைப் பொறுத்து ஒன்று முதல் மூன்று வாரங்களுக்கோ அல்லது பல மாதங்களுக்கோ நீடிக்கலாம்.

இந்தக் காய்ச்சலால் முதுகுவலி, கறுப்பு நிற வாந்தி, மூக்கில் இரத்தம் கசிதல், மூட்டு வலி போன்றவை இருக்கும்.

கைவிரல் மூட்டுக்கள், மணிக்கட்டு, முழங்கை, முழங்கால், கணுக்கால், கால்விரல் மூட்டுக்களைத்தான் இந்தக் காய்ச்சல் மிக அதிகமாகத் தாக்கும்.



## குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்


**நோய் அறிகுறிகள்**

நுளம்பு கடித்து நோய்க்கிருமிகள் உடலுக்குள் நுழைந்த ஒன்று முதல் பன்னிரண்டு நாட்களுக்குள் நோய் அறிகுறிகள் ஏற்படும்.

காய்ச்சல், நடுக்கம், தலைவலி, வாந்தி, மூட்டுவலி மற்றும் வீக்கம், தோலில் சிவப்பு நிறத் தடிப்புகள், கண்கூச்சம் போன்றவை முக்கியமான அறிகுறிகள்.

**பரிசோதனைகள்**

- எலீஸா (Elisa)
- HI (Heam agglutination Inhibition)
- காம்ப்ளிமெண்ட் ஃபிக்கேஷன் (CFT)
- ரிவர்ஸ் - பிசிஆர் (RT-PCR) -இந்தப் பரிசோதனையை டெங்குக் காய்சலுக்கும் சேர் த்து உறுதிபடுத்திக் கொள்ளலாம்.



டாக்டர் பி.சேகர்
குழந்தைநல மருத்துவர்
சென்னை

**சிகிச்சை**

சிக்குன்குனியாவுக்கு என்று குறிப்பாக எந்த மருந்தும் இல்லை.


- காய்ச்சல், மூட்டு வலி மற்றும் வீக்கத்தைக் குறைக்க பரசிடமோல் மருந்தைக் கொடுக்கலாம்.
- எக்காரணம் கொண்டும் அஸ்பிரின், ஸ்டீராய்ட் போன்ற மருந்து களைப் பயன் படுத்தக் கூடாது.

**சிக்குன்குனியாவுக்கு மருத்துவம்**

சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல ஓய்வு தேவை. கை, கால்களுக்கு மிதமான பயிற்சி கொடுப்பது நல்லது.

(வளரும்)

# மாணவர்களுக்கு வேர்க்கடலை அவசியம்!



வேர்க்கடலையில் (கச்சான்) உள்ள உயிர்வேதிப் பொருட்கள் நரம்பு செல்களை நன்கு செயல்படத்தூண்டும். இதனால் நரம்பு மண்டலத்துடன் தொடர்புள்ள பார்க்கிஸன், அல்ஸமர் போன்ற ஞாபகமறதி நோய்கள் வராமல் தடுக்கும்.

படிக்கும் மாணவ, மாணவியர் வேர்க்கடலையை தொடர்ந்து சாப்பிடுவதால் ஞாபகமறதி ஏற்படாது என்கிறார்கள் உணவு ஆய்வாளர்கள்.

மேலும், நரம்பு சம்பந்தமான நோய்களை வராமல் தடுக் கும் ஆற்றலும் வேர்க்கடலைக்கு உண்டு.

வேர்க்கடலையில் 30 விதமான ஊட்டச் சத்துக்கள் உள்ளன. இதில் புரதம் அதிகம். வேர்க்கடலையில் மேல் இருக்கும் தோலில் அதிக சத்துக்கள் உள்ளதால் அதனை நீக்காமல் சாப்பிடுவது அவசியம்.

நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் இருந்து இரத்தத்தில் சேரும் சீனியின் அளவை 'கிளை செமிக் இன்டெக்ஸ்' என்பார்கள். இது வேர்க்கடலையில் மிகவும் குறைவு என்பதால் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்காது.

மேலும், வேர்க்கடலையின்மேல் உள்ள பிங்க் கலர் தோலுக்கு நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு.

அது மட்டுமன்றி, வேர்க்கடலையில் உள்ள மக்னீசியத்திற்கு இன்சுலின் சுரக்கும் ஓமோன்களைத் துரிதப் படுத்தும் சக்தி உள்ளது.

கர்ப்பிணிகள் வேர்க்கடலையை சாப்பிடுவதால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு நரம்புக் கோளாறுகள் ஏற்படாது. வேர்க்கடலையில் கர்ப்பிணிப் பெண்களுக்கு மிகவும் அவசியமான விற்றமின் ஏ மற்றும் நீரில் கரையக்கூடிய விற்றமின் பி3 போன்றவை அதிகம் உள்ளன.


இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும் சோடியம் வேர்க்கடலையில் குறைவு. இதனால் வேர்க்கடலை சாப்பிடுவதால் இரத்த அழுத்தம் அதிகரிக்காது.

இதில் நார்ச்சத்து அதிகம் என்பதால் மலச்சிக்கல் ஏற்படாது. வேர்க்கடலையில் அன்டி ஒக்ஸிடெண்ட்ஸ் இருப்பதால் உடலில் உள்ள தேவையில்லாத கழிவுகளை வெளியேற்றிவிடும்.

தினமும் 50 கிராம் வேர்க்கடலை அவித்து அல்லது வறுத்து சாப்பிடவும். எண்ணெயில் பொரித்துச்சாப்பிட வேண்டாம்.




# தேநீர் அருந்துங்கள்



தேநீர் அருந்துவது நல்லது என்று கூறுகின்றனர் உணவு ஆராய்ச்சியாளர்கள். ஆனால் தேநீர் சுத்தமான தேயிலையில் தயாரிக்கப்பட்டதாக இருப்பது நல்லது . தேயிலையில் இருக்கும் 'கபின்' என்ற பொருள் நரம்பு மண்டலத்தில் செயலை ஊக்குவிக்கிறது.

'கிரீன் டீ' என குறிக்கப்படும் தேயிலை தற்போது அழகுசாதனப் பொருட்களில் பங்கு வகிக்கின்றது.

தேயிலையில் விற்றமின்கள், தாது உப்புக்கள் மற்றும் நோயைத் தடுக்கக் கூடிய " அன்டி ஒக்ஸிடெண்டுகள்' உள் ளன.

மூளைய ஊக்கப்படுத்தல், ஞாபகசக்தி, இளமையைத் தக்கவைத்தல், ஆரோக்கியம் ஆகியவை தேயிலைக்கு உரிய குணங்கள்.

பற்சிதைவு போன்ற பல் தொடர்பான நோய்களைத் தடுக்கும் விற்றமின் சி,டி ,கே மற்றும் புளோரைட்டுகள் ஆகியவை இதில் அதிகம் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை கறுப்போ, வெள்ளையோ
எலி பிடித்தால் சரி.

~ சீனப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்.குடாநாட்டில் மீண்டும் குருதியுறையும் 'பயப்பீதி' நோய்

யாழ்ப்பாணத்தில் மீண்டும் குருதி உறைந்து போகும் சம்பவங்கள் நடக்கத் தொடங்கி விட்டன. வன்னி யுத்தத்திற்குப் பின்னர் புறவய அமைதி காணப்பட்ட போதிலும் அப் புறவய அமைதி நீண்டகாலம் நிலைக்கவில்லை.

மீண்டும் அளவெட்டியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்த ஆரம்பம் சங்கானையில் அந்தணச் சிவாச்சாரியரை பலியெடுத்தும் அவரின் இரண்டு புதல்வர்களைக் காயப்படுத்தியும் தனது தாண்டவத்தின் ஒத்திகையைக் காட்டி நின்றது.

'களவு' என்ற பெயர் சூட்டலோடு அரங்கேறி உள்ள இந்த நாடகம் எங்கு போய் முடியுமென்பது அந்த இறைவனுக்குத்தான் தெரியும்.

இருந்தும் சங்கானையில் அந்தணச்சிவாச்சாரியர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான போது, யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க அவர்கள் அந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டிருந்தார்.

சமாதானத்திற்கான விருதைப் பெற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவிற்கு யாழ்ப்பாணம் கத்தோலிக்கப் பாதுகாவலன் மண்டபத்தில் பாராட்டு விழா நடந்த போதே அவர் இந்தச் சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டிருந்தார்.

யாழ்.கட்டளைத் தளபதியின் மன்னிப்புக் கோரல் யாழ்.குடாநாட்டு மக்களால் மிக உயரிய இடத்தில் வைத்து நோக்கப்பட்டது.

அந்தணச்சிவாச்சாரியருக்கு ஏற்பட்ட அவலத்திற்காக யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மன்னிப்புக் கேட்டமை அவரின் பெருந்தன்மையையும், இந்து மதத்திற்கு அவர் வழங்கிய மதிப்பையும் வெளிப்படுத்தியதாகக் கருதி அவரின் மன்னிப்புப் பெறுமதியானதெனவும் மக்கள் பேசிக் கொண்டனர்.

அது மட்டுமன்றி இதுபோன்ற சம்பவங்களுக்கு யாழ்.குடாநாட்டில் இனிமேல் இடமில்லை என்ற நம்பிக்கையையும் மக்கள் கொண்டிருந்தனர்.

ஆனால், அந்த நம்பிக்கைகளை உடைத்து எறியும் வகையில் நேற்று முன்தினம் இரவு உரும்பிராயில் வைத்து வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஐயா! யாழ்ப்பாண மக்களின் குருதி உறைந்து போகிறது. மீண்டும் பயந்த வாழ்க்கை. என்னே! கொடுமை.

களவுக்காக இப்படியான கொலையா? அல்லது கொலைக்காகக் களவு என்ற பெயர் சூட்டலா? யாரறிவார் அச்சோவே.

எது எவ்வாறாயினும் இதுபோன்ற துயரம் நிறைந்த சம்பவங்களை எவரும் எந்த வடிவத்திலும் அனுமதிக்கக் கூடாது.

யார் தவறு செய்தாலும் நீதித் துறையை நாடி உரிய தண்டனையைப் பெற்றுக் கொள்ள வைப்பதானது நீதி மட்டுமல்ல, மற்றவர்கள் நீதியாக நடப்பதற்கும் அதுவே தகுந்த வழியாகும். யாரிடம் அதிகாரம் உள்ளதோ அவர்களே இதனையும் செய்தாக வேண்டும்.

# வற்புறுத்தி சிங்கள மொழியில் பாட வைத்த தேசிய கீதம்!

## ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு



தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் வற்புறுத்திப் பாட வைத்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி குற்றஞ் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கை வருமாறு,

தேசிய அனர்த்த தினம், தேசிய பாதுகாப்புத் தினம் ஆகிய இரு வைபவங்களையும் இணைத்துப் பிரதமரும் பொது நிர்வாகப் பிரதி அமைச்சருமான டி.எம். ஜெயரட்ண முன்னிலையில் நடைபெற்ற பெருவிழா தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது.

சுனாமியால் தம் உறவுகளை இழந்த மக்கள் இவ்வைபவம் நடந்து கொண்ட வேளை கதறி அழுவதையும் இன்று வரை ஆறாத் துயரில் ஆழ்ந்திருப்பதையும் யாவரும் அறிந்ததே.

கண்முன்னே பச்சிளங் குழந்தைகள், அண்ணன் தம்பி, கணவன் மனைவி, தாய் தந்தையர் ஆகியோரை வெள்ளம் அடித்துச் சென்றதை எத்தனை வருடம் சென்றாலும் மறக்க முடியாது.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல் அப்பாவி மக்களையும் அரச ஊழியர்களையும் பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர், அதிபர்களையும் பாடசாலை வாத்தியக் குழுவினரையும் பங்கேற்கவும் கலந்து கொள்ளவும் வற்புறுத்தியமை மனித உரிமைகளை மீறும் ஒரு செயற்பாடாகும்.

கடந்த கால உறவுகளின் நினைவுகளை எண்ணிக் கதறி அழ வேண்டிய மக்களின் உரிமையைப் பறித்து எடுத்து அவர்களைக் கேளிக்கைகளில் ஈடுபடுத்தியமை வேதனைக்குரியதும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

தமிழ் பகுதியிலேயே தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் வற்புறுத்திப் பாட வைத்து நாட்டுப்பற்று பற்றியும் இன ஒற்றுமையைப் பற்றியும் பேசும் பிரதமர், இந்நிலைமைக்குப் பொறுப்பானவர்களுக்கு நல்லறிவு கூறுவாரென நம்புகின்றேன். நித்திய கண்ணீருடன் வாழும் வன்னி மக்களுக்குத் துயர் துடைக்கும் தார்மீகக் கடமை யாழ்.மக்களுக்கு உண்டு. ஏறக்குறைய நாற்பது வருடங்கள் எனது நண்பராக இருக்கின்ற பிரதம அமைச்சர் எனது வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பார் என நம்புகிறேன் என்றுள்ளது. (சு)

# விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு IV தரம் II இற்கான நேர்முகப்பரீட்சை

வடமாகாண பொதுச் சேவையில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு IV தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை வரோதய நகரில் அமைந்துள்ள வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அழைப்புக் கடிதம் கிடைக்காது விடினும் கீழ்க்குறிப்பிடப்படும் அபேட்சகர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கிராம அலுவலரின் நற்சான்றிதழ், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், விளையாட்டுத்துறை சான்றிதழ்கள் ஆகிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு,

எம்.ஆர்.எம்.அஸ்ஹர் (உப்புக்குளம், மன்னார்), யே.ஜெரமி (பெரியகமம், மன்னார்), த.லக்ஸ்மன் (நெல்லியடி கிழக்கு, கரவெட்டி), தி.கோவ்சிகன் (கந்தர்மடம், யாழ்ப்பாணம்), சோ.நிஷாந்தன் (நெல்லியடி கிழக்கு, கரவெட்டி), சு.சதீஸ்கண்ணா (சண்டிலிப்பாய் வடக்கு), ச.யசிதரன் (கைதடி, நாவற்குழி), இ.அகலியா (திக்கம், அல்வாய் மேற்கு), நா.நாகராஜா (தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை), சு.பிரசன்னா (ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை), க.மயூரன் (பாடசாலை வீதி, திருநெல்வேலி), சி.வல்லவக்குமரன் (கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்), செ.அருட்குமரன் (தெற்கிலுப்பைக் குளம், வவுனியா), பே.சக்திவேல் (தெற்கிலுப்பைக்குளம், வவுனியா), எம்.ஏ.டி.சத்சரகுண சேகர (ஈரப்பெரியகுளம், வவுனியா), அ.பிரபாகரன் (குமரபுரம், பரந்தன்), இ.போல்ராஜ் (விவேகானந்தா நகர் கிழக்கு, கிளிநொச்சி), தி.ஜெயந்தன் (கொக்குவில் வீதி, துணுக்காய்), யோ.சுதாகர் (2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு). (ஸ்ரீ-4)

## டிரக்டர் மோதி வயோதிபர் படுகாயம்

உழவு இயந்திரமும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று இரவு 6.45 மணியளவில் பிறவுண் வீதி, கொக்குவிலில் இடம்பெற்றது.

இதில் கொக்குவிலைச் சேர்ந்த கே.பால சுப்பிரமணியம் (வயது 75) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயம் அடைந்த இவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். (சு-4)

# விமல் வீரவன்சவின் கட்சியில் இருந்து இன்னுமொருவர் விலகல்

இலங்கையின் ஆளும் கட்சியின் முக்கிய பங்காளிக் கட்சி அமைச்சராகக் கருதப்படும் விமல் வீரவன்சவின் கட்சியில் இருந்து மற்றும் ஒரு முக்கியமானவர் விலகியுள்ளார்.

சிங்களத் திரையுலகின் பிரபல நடிகரான புத்ததாஸ் வித்தானாராய்ச்சி விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியிலிருந்து விலகியுள்ளார்.

தாம் தேசிய சுதந்திர முன்னணியின் மாற்றங்களை விரும்பியே சேர்ந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ள அவர் அங்கு ஒன்றுமே இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

வித்தானாராய்ச்சி கேகாலை மாவட்டத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் அமைப்பாளராகச் செயற்பட்டு வந்தார். அண்மையில் தேசிய சுதந்திர முன்னணியிலிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அசல ஜாகொட விலகினார்.

இடதுசாரிக் கொள்கையை முன்னெடுத்தே விமல் வீரவன்ச ஜே.வி.பியில் இருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட பின்னர் முதலாளித்துவக் கொள்கையில் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தாமும் தமது மனைவியும் நடத்தி வரும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தில் இணைந்திருந்தால் மாத்திரமே பிரச்சினைகள் இருக்காது என்ற காரணத்தினாலேயே விமல் வீரவன்ச அரசாங்கத்துடன் இணைந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



இந்திய மக்களுக்கு சீதை சொல்லாணா வேதனைகளை வெற்றிகொண்ட வியத்தகு இலட்சியம். மேலைநாட்டு மக்கள் 'செயலாற்று. செயலாற்றி உன் ஆற்றலை வெளிப்படுத்து' என்கின்றனர். இந்தியர்களோ 'துன்பங்களைப் பொறுப்பதன் மூலம் உன் ஆற்றலை வெளிப்படுத்து' என்கிறார்கள். மேலை நாடுகள் சொல்வதைக் கேட்பதன் மூலம் வாழ்க்கைப் பிரச்சினைக்கு வழிகண்டன. இந்தியாவோ மனிதனின் அடிப்டைத் தேவைக்கு வேண்டுமளவிற்கே பொருள் என்று ,பொருளைக்குறைப்பதன் மூலம் வாழ்க்கைப் பிரச்சினைக்கு வழி கண்டது. இந்திய நாட்டின் உருவகப்படுத்தப்பெற்ற இலட்சியமே சீதையாகும். வேறு எந்தப் புராணக்கதையும் சீதை என்னும் இலட்சியத்தைப்போல மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து,அவர்களுடைய ஒவ்வொரு இரத்தத் துளியிலும் கலந்து பாரதம் முழுவதும் ஊடுருவிச் சென்றதில்லை. இந்திய நாட்டிற்குச் சீதையே எல்லாம் எனலாம். எதுவெல்லாம் நல்லதோ,தூயதோ ,தெய்வீகமானதோ அதுவெல்லாம் சீதை எனும் பெயரில் புலனாகியுள்ளது.எதுவெல்லாம் பெண்மையோ அதுவெல்லாம் சீதையாக மலர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த 2004, டிசம்பர் 26 இல் ஏற்பட்ட சுனாமியின் ஆறாவது நினைவுதினம் உலகம் முழுவதும் நேற்றுமுன்தினம் அனுசரிக்கப்பட்டது. பெரலியா பகுதியில் சுனாமி ஏற்பட்ட போது ரயில் நீரில் மூழ்கிப் பலர் பலியாகினர். பலியானோரின் நினைவிடத்திற்கு அவர்களின் உறவினர்கள் அஞ்சலி செலுத்தச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# தண்ணீரில் நடந்து புதுச்சேரி பெண் சாதனை

குளோபல் உலக சாதனைக்காக, தண்ணீரில் ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்து புதுச்சேரி பெண் சாதனை நிகழ்த்தினார். புதுச்சேரி வில்லியனூரில் வசிப்பவர் ராணி (வயது 38) இவர் குளோபல் உலக சாதனைக்காக, தண்ணீரில் ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்து சாதனை செய்யும் நிகழ்ச்சியை மேற்கொண்டார்.

வில்லியனூர் அருகேயுள்ள பத்துக்கண்ணு சம்பூர்ணா, 'போகோலேண்ட்' நீச்சல் குளத்தில், இந்த நிகழ்ச்சியை முன்னாள் முதல்வர் ரங்கசாமி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார். காலை 10 மணிக்கு தண்ணீரில் நடக்க ஆரம்பித்த ராணி, பிற்பகல் ஒரு மணிக்கு நிகழ்ச்சியை முடித்தார். தலை மட்டும் தண்ணீருக்கு வெளியில் தெரிந்தவாறு, கால்கள் தரையில்படாத வகையிலும் நீச்சல் அடிக்காமலும் நடந்ததை பலர் வியப்புடன் பார்த்தனர்.



இதுகுறித்து ராணி கூறுகையில், நீச்சல் தெரியாத பலர் தண்ணீரில் மூழ்கி இறந்து விடுகின்றனர். இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தண்ணீரில் மூன்று மணிநேரம் நடப்பதற்காக கடந்த மூன்று தினங்களாகப் பயிற்சி பெற்றேன். இந்தப் பயிற்சி எனக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

சாதிக்கவேண்டும் என்று நினைத்தால் எந்த விடயத்திலும் வெற்றிபெற முடியும் என்றார். (ஸ்ரீ-4)

# பாகிஸ்தானிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பெரிய வெங்காயம் கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விற்பனை விலை 120 தொடக்கம் 130 மட்டத்தில் இருந்தது.

இந்தியாவிலிருந்து பெரிய வெங்காயத்தின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதன் விளைவாகவே அதன் விலை உயர்ந்து காணப்பட்டது.

இன்னும் சில தினங்களில் இதன் விலைகள் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கின் மொத்த விலை நேற்று முதல் 35 ரூபா ஆகக் குறைந்துள்ளது. ஒருகிலோ பருப்பின் மொத்த விற்பனை விலை 125 ரூபாவாகும். மரக்கறிகளின் தொகுதி விகித விலைகள் நேற்று குறைவடைந்து காணப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய ஒரு கிலோ அவரையின் மொத்த விற்பனை விலை 50 இற்கும் 60 இற்குமிடைப்பட்டதாகவும் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 60 தொடக்கம் 70 வரையானதாகவும் ஒரு கிலோ கோவாவின் தொகுதி விகித விலை 30 தொடக்கம் 40 வரையானதாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ஸ்ரீ-4-9)

# காரைநகர் கல்விக் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் புதிய கல்விக் கோட்டப் பணிமனை நேற்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இக் கோட்டக் கல்வி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தேசியக் கொடியினை பிரதம விருந்தினர் ஜீ.ஏ.சந்திரசிறி ஏற்றி வைக்க தீவக வலயக் கொடியினை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணனும் வடமாகாண கொடியினை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும் காரைநகர் கல்விக் கோட்ட கொடியினை வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இக் கல்விக் கோட்டத்தின் பெயர்ப் பலகையை வடமாகாண ஆளுநர் திரைநீக்கம் செய்து வைத்து புதிய கல்விக் கோட்ட பணிமனையினை திறந்து வைத்தார். (ஸ்ரீ-3-246)

# புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்

## விடுதலை சிறுத்தை இயக்கம் கோரிக்கை

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்பட வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் தமிழர் இறையாண்மை மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இடம் பெயர்மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டு மென அவர் தெரிவித்துள்ளார். திட்டமிட்டபடி தமிழர்களையும் தமிழ் மொழியையும் அரசாங்கம் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தியுள்ள அவர் தமிழீழத்திற்கு ஐக்கிய நாடுகள் அங்கீகாரத்தை வழங்க வேண்டும் எனவும் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் நாடுகளின் தூதரகங்களில் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-4)

# ஒளிவிழா நிகழ்வு

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை எமில் போல் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-24)

# காந்தியின் பொன்மொழிகள் இணையத்தளத்தில் பிரபலம்

இந்தியர்களில் மகாத்மா காந்தியின் பொன் மொழிகள் இணையத்தளத்தில் அதிக அளவில் இடம்பெற்று பிரபலமாக உள்ளன. உலகத் தலைவர்களின் பொன்மொழிகள் இணையத்தளங்கள் பலவற்றில் இடம்பெற்றுள்ளன. இதில் ஏராளமான பிரபலங்களின் பொன்மொழிகள் இடம்பெற்றுள்ளன. இதில் இந்தியர்கள் சிலரின் பொன்மொழிகள் மட்டுமே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவர்களில், மகாத்மாகாந்தி, ஜவகர்லால் நேரு, முன்னாள் ஜனாதிபதி ராதா கிருஷ்ணன், சுவாமி விவேகானந்தர், இந்திரா காந்தி, இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் மகாத்மா காந்தியின் பொன்மொழிகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.

இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள காந்தியின் 106 பொன்மொழிகள் பிரபலமாக உள்ளன. மற்ற இந்தியர்களின் ஒரு சில பொன்மொழிகள் மட்டுமே இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளன. உலகத் தலைவர்களில் அதிக பட்சமாக இங்கிலாந்து முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் 183 பொன்மொழிகளும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜான் கென்னடியின் 146 பொன்மொழிகளும், அந்த இணையத்தளத்தில் உள்ளன. மத நூல்களை பொறுத்தவரை பைபிளின் 370 வாசகர்களும், பகவத் கீதையின் 45 வாசகங்களும் குரானின் 9 வாசகங்களும் பொன்மொழிகள் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. எழுத்தாளர்களில் ஒஸ்கார் வைல்டின் 432 பொன்மொழிகளும் ஷேக்ஸ்பியரின் 420 பொன்மொழிகளும் அந்த இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. (ஸ்ரீ-4)

C.C.A கல்வி நிலையம்
V.V.T றோட் உடுப்பிட்டி

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது கல்வி நிறுவனத்தின் முதல் முத்து மணிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


த.கார்த்தீபன் (161புள்ளி)


த.தேனுஜன் (160புள்ளி)


பா.நிலோஜன் (153புள்ளி)


ம.அபிராம் (152புள்ளி)


ர.கஜிராஜ் (184புள்ளி)
மாவட்டநிலை - 03


மு.ஆர்த்திகன் (151புள்ளி)


ஜெ.ஒவியா (150புள்ளி)


கே.அஸ்வினி (148புள்ளி)


ஜெ.ஆர்த்தனன் (142புள்ளி)

வாழ்த்துபவர்கள் :-
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(3302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.சிவலிங்கத்தின் பூதவுடல் அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் சூட்டுச் சம்பவம் குறித்து அறிந்த அப்பிரதேச மக்கள் சம்பவ இடத்தில் குவிந்திருப்பதையும் விசாரணைகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# கிழக்கில் பெரு வெள்ளம் பல லட்சம் பேர் பாதிப்பு

## 100 வீடுகள் முற்றாக சேதம்

(கொழும்பு)

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் ஏனைய பகுதிகளில் பெய்துவரும் கடும் மழையாலும் வெள்ளப்பெருக்காலும் சுமார் 56 ஆயிரத்து 803 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 14 ஆயிரத்து 817 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இம் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக தற்போது 3 ஆயிரத்து 314 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இம் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 44 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ளன. இடம்பெயர்ந்த மக்களுக்காக திருகோணமலை மாவட்டத்தில் 6 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மற்றும் கண்டி மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கால் 100 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 434 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 5 வான் கதவுகளும் கலாவெல, திஸவெல, பஸவக்குளம் மற்றும் நாச்சாதுவ நீர்த்தேக்கங்களின் இரு வான் கதவுகளும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு திறந்து விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

(கரவெட்டி)

கரணவாய் மண்டான் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த வேலாயுதம் வரதீஸ்வரன் (வயது20) என்ற இளைஞரே விபத்தில் சிக்கி காயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கல்லுடன் மோதியதில் விபத்துக்குள்ளாகி தலையில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ச-7,24)

## பாதிரியார் கைதாகி விளக்கமறியலில்

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியிலுள்ள சிறுவர் இல்லமொன்றைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக தேடப்பட்டு வந்த பாதிரியார் கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

அதையடுத்து குறித்த பாதிரியாரை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டார்.

இச்சிறுவர் இல்லத்தினை சேர்ந்த இரண்டு சிறுமிகள் குறித்த பாதிரியாரினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக மன்னார் நீதிமன்றில் கடந்த ஒக்ரோபர் மாதம் 14 ஆம்திகதி வழக்கு தொடரப்பட்டது. (ஜ)

## மட்டு. தாந்தாமலை ஆலயத்துக்கு ஆராய்ச்சியாளர்களால் தொந்தரவு

(மட்டக்களப்பு)

இலங்கையில் சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படும் முருகன் ஆலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலய நிர்வாகத்தினருக்குத் தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரிகள் எனக் கூறப்படுபவர்களினால் தொந்தரவு கொடுக்கப்படுவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள தாந்தாமலை முருகன் ஆலயப் பிரதேசம் போர்க் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கீழ் இருந்தது.

தற்போது ஆலய வளாகத்தில் பிள்ளையார் ஆலயமொன்று நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையில், தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அம்பாறை மாவட்டக் காரியாலயத்திலிருந்து வந்ததாகக் கூறும் அதிகாரிகள், இந்தப் பிரதேசம் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உட்பட்டது எனக் கூறிப் பிள்ளையார் ஆலயம் அமைக்கும் வேலைகளை நிறுத்துமாறு தங்களுக்கு உத்தரவிட்டதாகவும், அதனைத் தாங்கள் நிராகரித்து விட்டதாகவும் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.மாணிக்கவாசகம் கூறுகின்றார்.

குறித்த அதிகாரிகள் இம்மலைப் பகுதியில் பௌத்த விகாரை அமைந்திருந்ததெனத் தங்களிடம் தெரிவித்ததாகக் கூறும் அவர், 13ம் நூற்றாண்டிலிருந்து இந்தப் பிரதேசம் இந்து மக்களின் வழிபாட்டுடன் தொடர்புடையது எனத் தமது பக்க நியாயத்தைக் கூறுகின்றார்.

"ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதால் மட்டக்களப்பு அரசாங்க அதிபரூடாகத் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அப்படித் தொடர்பு கொண்டால் இது தொடர்பான ஆவணங்களை விசாரணைகளின் போது தங்களால் முன்வைக்க முடியும்" என்றும் தெரிவித்த க.மாணிக்கவாசகம், இது தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் கவனத்துக்குத் தங்களால் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ச)

## பன்றிக் காய்ச்சலால் 2 மாதங்களில் 22 பேர் பலி, 342 பேர் பாதிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் கடந்த இரு மாதங்களில் பன்றிக்காய்ச்சலால் 22 பேர் பலியாகியுள்ளதுடன் 300இற்கும் அதிகமானோர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 25 ஆம் திகதியிலிருந்து 22 பேர் மரணமாகியுள்ளதாகவும் இந் நோயினால் பாதிக்கப்பட்ட 342 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உத்தியோகபூர்வ புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மனிதர்களின் நுரையீரல்களை தாக்கும் எச்1என்1 எனும் இந்த வைரஸ் கடும் மழை மற்றும் குளிரான காலநிலை காரணமாக வேகமாக பரவுவதாக தொற்று நோயியல் நிபுணர் சுகத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சனநெரிசல் மிகுந்த இடங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களை கோரியுள்ளது. அத்துடன் பொதுத் தொலைபேசிகளை பராமரிப்பவர்கள் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு 8 தடவை அவற்றைச் சுத்தம் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பன்றிக்காய்ச்சல் காரணமாக இலங்கைக்குப் பயணம் செய்வதை குறைத்துக்கொள்ளுமாறு மாலைதீவு அரசாங்கம் அந்நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கடலில் தத்தளித்த மீனவர்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இயந்திரக் கோளாறு காரணமாக ஆழ் கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் நால்வர் சுழிபுரம் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளனர்

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த இம் மீனவர்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டு வலி மேற்கு கடற்றொழில் சங்கத்தில் தங்கவைக்கப்பட்டு இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை தாயகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ச-5)

## ஐரோப்பிய நாடாளு...

டிசெம்பர் 6 ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்தில் இலங்கை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலளிப்பதற்கு இலங்கைக்கு அவகாசம் வழங்கப்படவில்லைஎனஐரோப்பிய ஒன்றியம், பெல்ஜியம், லக்ஸம்பர்க் ஆகியவற்றுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆர்சிங்க கடந்த 16 ஆம் திகதி கடிதம் மூலம் உப குழுவின் தலைவி ஹாட்டவுலாக்குப் புகார் செய்திருந்தார்.

இதற்கு அனுப்பிய பதிலில் இலங்கை அரசாங்கத்தின் பதிலை எழுத்து மூலம் அனுப்புமாறு ஹாட்டவுலா தெரிவித்துள்ளார். அந்தப் பதில் உப குழுவின் அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்படும் என உறுதியளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## வலிகாமம் பிரதிக் கல்வி...

இராப்போசனத்தை முடித்துக் கொண்டு தண்ணீர் குடிப்பதற்காகச் சமையலறைக்குள் சென்ற சிவலிங்கம் சமையல றைக்குள் பதுங்கியிருந்தவனைக் கண்டு அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு சத்த மிட்டுள்ளார்.

அச்சமயம் நித்திரைக்காகச் சென்றிருந்த மகள் அங்கு ஓடிவர, தந்தையைச் சுடுவதற்குத் தயாரான ஆயுததாரியிடம், எங்களிடமிருக்கின்ற நகைகளையெல்லாம் தருகின்றோம் அப்பாவைச் சுட வேண்டாம் எனக் கெஞ்சினார்.

இருந்தும் அந்நபர் சிவலிங்கத்தின் மார்பில் துப்பாக்கியால் சுட்டு விட்டு, மகளின் காதிலிருந்த தோடுகளையும் அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் நடந்த போது சிவலிங்கத்தின் மனைவியும் அவரது மற்றைய பிள்ளைகளும் அண்மையிலுள்ள சிவலிங்கத்தின் சகோதரி வீட்டுக்குச் சென்றிருந்தனர். தந்தைக்கு ஏற்பட்ட சம்பவத்தை மகள் ஓடிச் சென்று அவர்களிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்துச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சிவலிங்கத்தின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச் சம்பவம் குறித்துப் பொலிசாரும், படைத்தரப்பும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். பிரேத பரிசோதனைக்குப் பின்னர் நேற்று மாலை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் எச்சரிக்கையை...

அதேவேளை இலங்கை கடற்படை ஈரானிடமிருந்து பல நூறு மில்லியன் ரூபாய் பெறுமதியான கடற்படை உபகரணங்களை வாங்கும் முயற்சியையும் மேற்கொண்டிருந்தது.

இவ் இரு ஆயுதக் கொள்வனவு முயற்சியும் மேற்படி இரு நாடுகளுக்கும் எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத விற்பனை தடை தொடர்பான தீர்மானங்களுக்கு முற்றிலும் முரணாக அமைந்திருந்தது.

இவ் விடயம் தொடர்பாக கடும் சினம் அடைந்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிளாரி கிளின்டன் கொழும்பிலிருந்த அமெரிக்கத் தூதுவருக்கு எழுதிய குறிப்பில் இவ் விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேசுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

இம் முயற்சி நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கை மீது கடும் பொருளாதார தடைகளை நடைமுறைப்படுத்த நேரிடும் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துமாறு இக் குறிப்பில் கிளாரி கிளின்டன் கேட்டிருந்ததாக நோர்வே ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க புலனாய்வுத் தகவல்களின் படி இலங்கை அரச நிறுவனம் ஒன்று வட கொரியாவுடனான இந்த ஆயுத பேரத்தில் ஈடுபட்டிருந்தது. மேலும் ஈரானிடமிருந்து 11.4 மில்லியன் டொலர் பெறுமதியான ராக்கெட் ஏவுகணைகளையும் 40 மில்லியன் டொலர் பெறுமதியான வேறு படைக்கலஉபகரணங்களை கொள்வனவு செய்யும் முயற்சியில் இலங்கை கடற்படையும் பேச்சுக்களை நடத்தியிருந்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதியிடப்பட்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிளாரி கிளின்டனின் குறிப்பில் இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தும்படி இலங்கை அரசாங்கத்தைக் கேட்குமாறு பணிக்கப்பட்டிருந்தது.

இவ் ஆயுதக் கொள்வனவின் விளைவுகள் குறித்து இலங்கை கேட்குமானால் இலங்கையுடனான அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் தடுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடும் என்பதை தெரிவிக்குமாறும் கிளாரி கிளின்டன் அமெரிக்க தூதுவருக்கு எழுதியிருந்ததாக விக்கிலீக்ஸ் ஆவணம் வெளிப்படுத்தியிருந்தது.

மூன்று நாட்களின் பின்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகமவை அழைத்த அமெரிக்கத் தூதரகம் இது தொடர்பான ஒரு எழுத்து மூல அறிவுறுத்தலையும் வழங்கியிருந்தது.

எனினும் இந்த ஆயுதக் கொள்வனவு முயற்சியை மறுத்த வெளிவிவகார அமைச்சர், இதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் தான் அறிந்து வைத்துள்ளதாக தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக நாம் சந்தேகித்தோம். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவே நாம் வடகொரிய அதிகாரிகளை சந்தித்தோம் என ரோகித்த போகொல்லாகம இச் சந்திப்பின்போது அமெரிக்க தூதுவரிடம் தெரிவித்தார்.

ஆனாலும் இலங்கை அமைச்சரின் இவ் விளக்கம் அமெரிக்காவுக்கு திருப்தியை அளிக்கவில்லை. ஆனால் இச் சந்திப்பு இடம்பெற்ற காலத்தில் படையினர் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இருந்தனர். இந்த யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட மக்கள் தொகை தொடர்பாக சுயாதீனமாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என நோர்வே ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் கடந்த ஒக்டோபர் மாதத்தில் இது தொடர்பாக மீண்டுமொரு சந்திப்பு இடம்பெற்றது. இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஓர் உயர் அதிகாரியை அமெரிக்கத் தூதுவர் பற்றிசா சந்தித்தார்.

ஈரானுடன் எவ்வித ஆயுதக்கொள்வனவு முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என தமது உள்ளக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக இலங்கை உயர் அதிகாரி இச் சந்திப்பின் போது தெரிவித்தார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவைக் குலைக்கும் நோக்குடன் இச் செய்தி பரப்பப்பட்டிருக்கலாம் எனவும் இவ் அதிகாரி அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவித்தார்.

ஆனால் வடகொரியாவிடம் திட்டம் இடப்பட்ட ஆயுதக் கொள்வனவு தொடர்பாக இலங்கை அதிகாரி எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை.

ஈரானுடனான ஆயதக் கொள்வனவு முயற்சியை இலங்கை மறுத்துள்ளபோதும் ஈரானின் படை அதிகாரிகளுடன் இலங்கை மேற்கொண்டுள்ள அண்மைய தொடர்புகள் குறித்து அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது.

ஈரானிய அணுசக்தி தொழில்நுட்பத்தை கொள்வனவு செய்யும் பேச்சுக்களை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் விரும்புவதை இட்டு ஜப்பானிய படைத்துறை வட்டாரங்கள் கவலையடைந்திருப்பதாக வந்துள்ள செய்திகள் குறித்தும் அமரிக்கத் தூதுவர் அக்கறை கொண்டிருந்ததாக இவ் வூடகம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பீரிஸ்-பிரதீப்...

பாதுகாப்புச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை இலங்கை வந்துள்ள இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரச தரப்பு முக்கிய உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)


M.C. COLLEGE MC

கிளிநொச்சி, முல்லைத்தீவில் முதன்முதலாக

ADOP Multimedia Diploma

அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது



❋பாடசாலை மாணவர்களுக்கான கணனிக் கற்றைநெறி(ICT,GIT)

❋பணிபுரிவோர்க்கான விசேட நேரசூசியுடன் வேலைத்திட்டங்களுக்கமைவான கணனிக்கற்கை.

❋சிறுவர்களுக்கான அடிப்படைக் கணனி அறிவூட்டல்.

❋ஒவ்வொரு மாணவர்களிலும் ஆசிரியர்களின் விசேட கவனமும் அதிக நேர பயிற்சி வகுப்புக்களும்.

போரினால் பாதிக்கப்பட்ட தாய் /தந்தையை இழந்த மாணவர்களுக்கான விசேட கட்டணச் சலுகையுடன் கற்கைநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கப்படும்.

(சி-972)

ஆரம்பம்:28.12.2010 நேரம் :3.00 PM

நெத்தலி ஆறு, தர்மபுரம் ,கிளிநொச்சி.

தொடர்புகளுக்கு 0777389970


# புலிகளின் தொழில்நுட்ப...

விடயம்தான் அவர்களின் இயந்திரப் படகுத் தொழில்நுட்பமாகும்.

அதன் காரணமாக கடற்புலிகளின் இயந்திரப் படகுகள் மற்றும் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டிருந்த தொழில்நுட்பக் குறிப்புகள் என்பவற்றுடன் இராணுவத்தின் பிடியிலிருக்கும் கடற்புலிகளின் தளபதி சூசையின் நெருங்கிய சகா ஒருவரின் வழிகாட்டுதல் என்பவற்றைக் கொண்டு கடந்த வருடம் தொடக்கம் கொழும்பை அண்மித்த வெலிசறவில் இயந்திரப் படகு தயாரிக்கும் திட்டத்தை கடற்படை ஆரம்பித்தது.

தற்போதைய நிலையில் நூற்றுக்கும் அதிகமான அதிவேக தாக்குதல் படகுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கெல்லாம் புலிகளின் அதிவேக தாக்குதல் படகுகளின் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக தற்போதைக்கு பலநாடுகளில் காணப்படும் தாக்குதல் படகுகளை விட இவற்றின் வேகம் அதிகமாகவுள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் நாட்களில் கடற்படையின் தயாரிப்பான அதிவேக தாக்குதல் படகுகள் வெளிநாட்டுக் கண்காட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அதன்பின் அவற்றை சர்வதேச ரீதியில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ச-5)

# அநுராதபுர தமிழ் சிறை...

கைதிகளாகிய நாங்கள் தங்களிடம் மனம் உவந்து கோருவது, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவாகிய தங்களின் செயற்பாடுகள் நம்பகத் தன்மையும் முன்னேற்றக்கரமானதாகவும் இருப்பதோடு தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகளின் பிரச்சினைகளையும் கவனத்துடன் அவதானித்து வருவது எம்மத்தியில் எமக்கோர் முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது.

பிணையின்றியும் துரித விசாரணையின்றியும் சிறைச்சாலைகளில் நாம் வாடிக் கொண்டிருக்க எமது குடும்பங்கள் கடந்தகால போர் சூழலினால் இருப்பிடங்களையும் குடும்ப உறுப்பினர்களையும் இழந்து அவயவங்களையும் இழந்தும் போர் வடுக்களை சுமந்து கொண்டு எங்களின் விடுதலை ஏக்கத்துடன் எவ்வளவோ சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து மரண வேதனையில் நடைப் பிணங்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவினராகிய தாங்கள் பூசா தடுப்பு முகாமிற்குச் சென்று தமிழ் கைதிகளை சந்திக்கவுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம்.

அந்தவகையில் அநுராதபுரம் சிறைச்சாலை மற்றும் ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளாகிய எங்களையும் சந்தித்து எமது பிரச்சினைகளையும் கேட்டறிந்து எங்கள் வழமான எதிர்கால வாழ்விற்கு வழியமைத்துத் தருமாறு மிகவும் பணிவுடன் அருள் கூர்ந்து வேண்டுகிறோம் என்றுள்ளது. (ச-5)

# இந்திய பாதுகாப்புச்...

கை வந்த அவர் பாதுகாப்புச் சம்பந்தமாக பல்வேறுபட்ட அதிகாரியுடன் மூன்று நாட்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

பிரதீப் குமாரின் இலங்கைக்கான விஜயத்தின்போது இரு நாடுகளுக்குமிடையில் பாதுகாப்பு சம்பந்தமான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்புத் தொடர்பில் கூட்டுறவு மற்றும் உறவில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வருடம் யூன் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது பாதுகாப்புத் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் வருடாந்த கலந்துரையாடலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S.றோட், இணுவில். (இரு இடத்திலும்)

A/L 2013

-கலை, வர்த்தகப் பிரிவு-

ஜனவரி 2 இல் காலை 8.00 மணி

❋ உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும் ❋



Cey Labs Solutions (Pvt) Ltd.

CeyLabs Solutions (Pvt) Ltd.
#204, Brown Road,
Jaffna.

எமது நிறுவனத்தால் சிறப்பான முறையில் வழங்கப்படும் சேவைகள்

- Web System Development (இணையத்துடன் தொடர்புடைய மென்பொருட்கள்)
  - E-Commerce Systems (மின்-வணிகம் தொடர்பான மென்பொருட்கள்)
  - E-Learning Systems (மின்வழிக்கற்றல் தொடர்பான மென்பொருட்கள்)
  - Online Reservation Systems (இணையத்தினூடான முற்பதிவு மென்பொருட்கள்)
- Software Development (மென்பொருள் வடிவமைப்பு)
  - Stock Control Systems
  - ERP Systems
  - Point of Sale Systems
  - Student Management Systems
  - HRM Systems
  - Payroll Systems
- Security System Installations (பாதுகாப்பு கண்காணிப்புக் கருவிகள்)
  - Automated Alarm Systems
  - CCTV Cameras
  - Access Control (Finger Print Systems)
- Network Support Services (வலைப்பின்னல் சேவைகள்)
- Website Development

(சி-981)

www.ceylabs.com
021-2221807
contact@ceylabs.com
077-2517223



கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி

ENGLISH CLASS
பிரிவு II

by:S.சடகோபன்

ஆரம்பம்:30.12.2010 மு.ப.9.00

❋ O/L எடுத்த மாணவர்களுக்கு
❋ அனுமதி 60 மாணவர்களுக்கு மட்டும்
❋ முன்கூட்டியே அனுமதியைப் பெறவும்

(3300) -நிர்வாகி





அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்.

பமிலி சுப்பர்

கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் பிஸ்கட், பால்மா, சொக்லேட், சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகைகள், பழவகை என்பவற்றைப் பெற்றுக்

புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு விற்பனை

சந்தைக்கு அருகாமை, மானிப்பாய். (சி-1956)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, [illegible] இலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org